# உதயன்

சுடர் : 36 | கதிர் : 019 | செவ்வாய்க்கிழமை | கார்த்திகை 30ஆம் நாள் 15 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## தொற்றுப் பரவிவிட்டதால் முடக்கிப் பயனில்லை

### மாவட்டச் செயலர் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்ப்பாண மாவட்டத்தை முடக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. தொற்று அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிப்பழகியவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். தொற்று பரவலாக இனங்காணப்படும் நிலையில் உடுவிலை மட்டும் முடக்கிப் பயனில்லை.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் 19

## வடக்குக்கு 16ஆம் திகதி பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றால் நாளை 16ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரையில் வடக்கு மாகாணத்துக்கு மழை கிடைக்கும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியி யற்றுறை மூத்த விரிவுரையாளர் ந. பிரதீபராஜா தெரிவித் 14

## கொரோனா காவு 154

கொழும்பு, டிசெ.15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்தார்.

பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 73 வயதான பெண்ணொருவர் கடந்த 11ஆம் திகதி உயிரிழந்துள்ளார். எனினும், அவருக்கு கொரோனாத் தொற்று காணப்பட்டமை நேற்றுமுன் 19

## 33,000 தாண்டியது தொற்று

கொழும்பு, டிசெ.15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

நேற்றும் 688 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது 19

## யாழ்ப்பாணத்தில் கொரோனா விஸ்வரூபம்

### சங்கிலித் தொடராக விரிகிறது தொற்றாளர் வட்டம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 15

யாழ்ப்பாணத்தில் நேற்று ஆறு பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களை விட காங்கேசன்துறை கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கடற்படைச் சிப்பாய்க்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. 19

## வங்கி ஊழியருக்கும் தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்ப்பாணத்தில் நேற்று 6 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்ட நிலையில், அவர்களில் இணுவிலைச் சேர்ந்த ஒருவர் அரச வங்கி ஊழியராவார். இவர் மருதனார்மடம் சந்தைக்கு பணம் வசூலிப்புக்காகச் சென்று வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 19

## உரும்பிராய், சங்கானை சந்தைகளுக்குப் பூட்டு!

யாழ்ப்பாணம், டிசெ.15

உரும்பிராய் பொதுச் சந்தை முன்னெச்சரிக்கை நோக்கில் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கோரிக்கைக்கு அமைய தற்காலிகமாக உடன் நடைமுறைக்கு வரும்வகையில் மூடப்படுகின்றது என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். 19

## வவுனியாவில் நான்கு பாடசாலைகள் பூட்டு

வவுனியா, டிசெ.15

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுவரும் நிலை 19

## கிளிநொச்சி மரண வீட்டில் மருதனார்மடம் தொற்றாளர்

கிளிநொச்சி, டிசெ.15

மருதனார்மடம் சந்தை கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதியான நபர் ஒருவர் 19

## யாழ்ப்பாணம், வலிகாமம் பாடசாலைகளுக்கு பூட்டு

யாழ்ப்பாணம், டிசெ.15

வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கு உள்பட்ட அனைத்து பாடசாலைகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படுகின்றன என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எல்.இளங்கோவன் அறிவித்துள் 14

## அபாயத்தில் வவுனியா

வவுனியா, டிசெ.15

வவுனியாவில் நேற்று மாலை மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், இருவர் சமூகத்துக்குள் இருந்து தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனை 19

## நீதிமன்ற நடவடிக்கையை சட்டத்தரணிகள் தவிர்ப்பு

விரிவு பக்.07

## வவுனியா சிறையில் புகுந்தது கொரோனா

வவுனியா, டிசெ.15

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏனைய கைதிகளுக்கு 14

## சாளம்பைக்குளத்தில் மூவருக்குத் தொற்று!

வவுனியா, டிசெ.15

கொரோனாத் தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்ட புதிய சாளம்பைக்குளத்தில் மேலும் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் 19


செலான் வங்கியிடமிருந்து

உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ.68,000/-

0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

சந்தை நிலவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் தங்கக்கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)" கம்பனிப் பதிவிலக்கம் PQ 9

இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# எதிர்ப்பு அரசியல் மூலமாக தமிழருக்கு நன்மையில்லை

## விக்னேஸ்வரன் விளக்கம்

**யாழ்ப்பாணம், டிசெ. 15**

**எதிர்ப்பு அரசியலால் நன்மை எதுவுமில்லை. இணக்க அரசியல் என்றுகூறி சுயநலமிகள் இணக்க அரசியல் செய்து வந்ததால் எமது மக்களுக்கு நன்மை ஒன்றுமில்லை என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.**

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமை தொடர்பில் விடுத்துள்ள கேள்வி பதில் ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்ப்பு அரசியல், இணக்க அரசியல் என்று இருந்து வந்துள்ளது. அல்லது எதிர்ப்புக்காக நடுநிலைமை அல்லது இணக்கத்துக்காக நடுநிலைமை என்றும் இடம்பெற்றுள்ளன. பொதுவாக போரை ஆதரித்தவர்கள் எதிர்ப்பு அரசியலையும் பொருளாதார மேம்பாட்டையும் தமது சொந்த நன்மைகளை எதிர்பார்த்தவர்கள் இணக்க அரசியலையும் ஆதரித்து வந்துள்ளார்கள்.

**பேச்சு மாற்றம்**

சுமந்திரன் இணக்க அரசியலுக்காக போர்க்குற்ற விசாரணை முடிவடைந்துவிட்டது என்று கூறியிருந்தார். ஒற்றையாட்சிக்குள் பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பரவலை சமஷ்டி என்று அடையாளம் காட்டினார். 'எக்சத்' 'ஏகிய' பற்றி நிறையப் பேசினார். தற்போது அவரின் பேச்சுக்கள் மாறி வருவதை எல்லோரும் அவதானிக்கலாம். விசாரணை முடிந்தது என்று முன்னர் கூறியவர் விசாரணை வேண்டும் என்று இன்று கூறுகின்றார். மேலும் சமஷ்டி வேண்டும் என்கின்றார். என்ன நடந்தது? தமது இணக்க அரசியலை மக்கள் விரும்பவில்லை என்பதை அவர் உணர்ந்துகொண்டதே காரணம். என்றாலும் எதிர்ப்பு அரசிலுக்குள் மீண்டும் போவதையும் அவர் விரும்பவில்லை போலத் தெரிகின்றது. ஆகவே இம்முறை இரண்டும் இல்லாமல் நடுநிலைமை வகிக்கக் கூட்டமைப்பு முன்வந்துள்ளது.

**உண்மை உரைப்பேன்**

அரசை நான் காரசாரமாக சாடியாகி விட்டது. உண்மைகளை எடுத்துரைப்பேன். எதிர்க்கட்சிகளின் கடமை அரசை எந்நேரமும் எதிர்ப்பதே என்ற கருத்தை நான் ஏற்க மாட்டேன். எதிர்க்கட்சிகள் அரசை சரியான திசையில் பயணிக்க வழி நடத்த வேண்டும் என்பதே எனது கருத்து. அரசு பெரும்பான்மை நிலையைப் பெற்ற ஒன்று. எமது வாக்குகள் அவர்களுக்குத் தேவையற்றது. நாங்கள் அவர்களுக்கு எதிராக வாக்களித்தாலும் ஒன்றுதான். நடுநிலைமை வகித்தாலும் ஒன்றுதான். ஆனால் மாற்றத்தை ஏற்படுத்தாத எந்தச் செயலோ பேச்சோ அர்த்தமற்றது. பத்திரிகையில் போடுவதற்காக எதிர்ப்பது குழந்தைப் பிள்ளைத்தனம்.

**அரசுடன் பேச்சு**

ஆகவே நான் வாக்களிக்காமல் இருப்பதே மேல் என்று எண்ணினேன். காரணம் தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு அரசியலைக் காட்டிவந்த முன்னைய அரசியல்வாதிகள் தொடர்ந்து எதிர்ப்பு அரசியலையே வெளிப்படுத்தி வந்திருந்தார்கள். அவர்களை எதிரிகளாகவே அப்போதைய அரசினர் பார்த்தார்கள். அதனால் அவர்களுடன் அரசுகளும் பேசவில்லை. இவர்களாலும் அவர்களுடன் பேசமுடியவில்லை. நான் அவ்வாறு எனது காலத்தைத் தொடங்க விரும்பவில்லை. ஏற்கனவே 2ஆம் வாசிப்பில் நான் வாக்களிக்காது இருந்திருந்தேன். அதே போல்த் தொடர்ந்தால் என்ன என்று எண்ணினேன். காரணம் எமது அரசியல் கைதிகள் பற்றி அரசுடன் பேச வேண்டி இருக்கின்றது. மற்றும் ஒரு புதிய அரசமைப்பு நிர்மாணத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம். முன்னைய அரசு காலத்தில் எமது வாக்குகளுக்குப் பலம் இருந்தது. அப்போது 'எமது சிறைக் கைதிகளை வெளிவிடுங்கள். நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கின்றோம்' என்று கூறியிருக்கலாம். எமது பிரதிநிதிகள் அவ்வாறு கூறவில்லை. தமது வாக்கை மக்கள் நலன் கருதிப் பாவிக்கவில்லை. இப்பொழுது அவ்வாறான ஒரு நிலை இல்லை. பேசித் தீர்க்க வேண்டியுள்ளது.

அரசாங்கம் மற்றும் முக்கிய எதிர்க்கட்சி ஆகியோருடன் பேசுவதென்றால் பக்கச் சார்பில்லாமல் இருப்பதே உசிதம் என்று நான் கண்டுகொண்டேன். ஒன்றை எதிர்ப்பது வெற்றியல்ல. ஒன்றுடன் இணைவதும் வெற்றியல்ல. வருவதற்கு முகம் கொடுக்கக் கூடியதாக இருப்பதே வெற்றி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதற்காக நடுநிலை வகித்தார்கள் என்பதை அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். என்றுள்ளது. (ஒ.இ)

# ஒரு வாரமாகியும்கூட பணம் வழங்கவில்லை

*சமுர்த்திப் பயனாளிகள் கவலை; இன்று வழங்கப்படும் என்கிறார் அதிகாரி*

சாவகச்சேரி, டிசெ. 15

கொட்டும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களை ஓரிடத்துக்கு அழைத்த சமுர்த்தி வங்கி அலுவலர்கள் வங்கியில் பணம் மீளப்பெறும் படிவத்தில் கையொப்பம் பெற்றுச் சென்றிருந்தனர். ஒரு வாரம் கடந்துவிட்டபோதும் இன்னமும் பணம் வழங்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு பிரிவில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளை பிரிவில் உள்ள கோவிலுக்கு வருமாறு சமுர்த்தி வங்கியினர் அழைப்பு விடுத்திருந்தனர் .கொட்டும் மழையில் சமையலையும் கைவிட்டு அங்கு சென்ற மக்களிடம் பணம் மீளப்பெறுவதற்கான படிவம் வழங்கி அதில் கையொப்பம் பெற்றனர். உங்கள் வீடுகளுக்கு பணம் கொண்டுவந்து தருவோம் என்று கூறிவிட்டுச் சென்றிருந்தனர்.

அடைமழையால் பாதிக்கப்பட்டிருந்த சமுர்த்திப் பயனாளிகள் பணம் வழங்கப்படவுள்ளது என்று ஆர்வத்துடன் இருந்தனர். ஆனால் ஏமாற்றம் அடைந்தனர். கடந்த 7ஆம் திகதி கையொப்பம்பெற்றுச் சென்றிருந்தனர். நேற்றுடன் ஒருவாரம் கடந்துவிட்டது, பணம் தரவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக சாவகச்சேரி சமுர்த்தி வங்கி அதிகாரியிடம் கேட்டபோது, கொரோனா காலத்தைக் கருத்திற்கொண்டு சமுர்த்திக் கொடுப்பனவுக்கான பணம் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றது. கோவிற்குடியிருப்பு பிரிவு சமுர்த்திப் பயனாளிகளை கடந்த வெள்ளிக்கிழமை வங்கிக்கு அழைத்து பணம் வழங்க ஏற்பாடு மேற்கொண்டபோதிலும் ஏற்கனவே கொடுப்பனவு வழங்கப்பட்ட பிரிவுக்கு பணம் வழங்கப்பட்டது என்றும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் கோவிற்குடியிருப்பு பிரிவில் உள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (து-9)

# சம்பிக்கவுக்கு புதிய பதவி

கொழும்பு, டிசெ.15

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவராக விரைவில் நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அவர் விலகியுள்ள நிலையில் இந்தப் பதவி வழங்கப்படவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய சமூக சக்தியொன்றை உருவாக்கும் நோக்கிலேயே, தான் கட்சியிலிருந்து விலகியுள்ளேன் எனவும் சம்பிக்க கூறியுள்ளார். (வ-இ)

# தமிழ், முஸ்லிம் கட்சி வேட்பாளர்கள் ஐ.ம.ச.வில் போட்டியிடத் தடையா?

கொழும்பு, டிசெ.15

தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதற்கு தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு இனி வேட்புமனு வழங்கப்படமாட்டாது என லக்ஷ்மன் கிரியல்லவால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு அவரின் தனிப்பட்ட கருத்தாகும். அது கட்சியின் நிலைப்பாடு அல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்படி நிலைப்பாட்டை அறிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை கொண்டிராத தமிழ், முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின்கீழ் தேர்தலை எதிர்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படாது எனவும், ஆனால் தேர்தலின் பின்னர் அவர்கள் இணைந்து செயற்படலாம் எனவும் லக்ஷ்மன் கிரியல்ல நேற்றுக் கருத்து வெளியிட்டிருந்தார். (ஒ.44)

*முன்பள்ளி, ஆரம்பப்பிரிவுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில்*

# 2 வாரங்களில் திகதி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் திகதி இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியாள் இடைவெளி பேண வேண்டும் என்ற காரணத்தால் முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து வியாழக்கிழமை சுகாதார அமைச்சுடன் பேச்சு முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனவரி மாதம் பாடசாலை கற்றல் நடவடிக்கை மற்றும் மேலதிக வகுப்பு ஆகியன முழுமையாக ஆரம்பிக்கப்படும். புதிய வருடத்தில் புதிய கல்விக் கொள்கை செயற்படுத்தப்படும். என்றார். (து-இ)

*வவுனியா வர்த்தகர்களின்*

# பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சின் செயலர் ஆராய்வு



வவுனியா, டிசெ. 15

வவுனியா வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கும் இளைஞர் விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளருக்கும் இடையில் விஷேட கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

கலந்துரையாடலில் பழைய பஸ் நிலையம் மீண்டும் இயங்குதல் பற்றியும் வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

பழைய பஸ் நிலையத்திலிருந்து மிகவிரைவில் பஸ்கள் புறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று செயலாளர் தங்களிடம் உறுதியளித்தார் என்று வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (து110)

# முல்லையில் மக்களது காணிகளுக்கு வனவளத் திணைக்களத்தால் எல்லை

*பாதிக்கப்பட்ட மக்கள் கடும் அதிருப்தி*

**முல்லைத்தீவு, டிசெ.15**

**முல்லைத்தீவு குமுழமுனை பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்து எல்லைப்படுத்துகிறது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் மாவட்டச் செயலாளருக்கு கிராம மக்கள் முறையிட்டுள்ளார்கள்.**

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

வீரன்குளம் என்ற இடத்தில் 80 ஏக்கரும்,குருந்தூர்குளத்தில் 120 ஏக்கரும்,கரடிப்பூவல் மரமுந்திரிகை செய்கை இடத்தில் 300 ஏக்கரும்,ஆறுமுகத்தான் குளத்தில் 120 ஏக்கரும்,குமுழமுனை மேற்கு பகுதியில் 200 ஏக்கரும்,தண்ணீர் முறிப்பு பகுதியில் 100 ஏக்கருமாக சுமார் ஆயிரம் ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களம் எல்லைப்படுத்தியுள்ளது. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக குறித்த காணியில் செய்கை பண்ணப்பட்டு வந்த போதும் காணிக்கான உறுதி மற்றும் பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட துண்டுகள் இருந்த போதும் கரைதுறைப்பற்று பிரதேசத்தின் காணி அதிகாரிகள் இந்த காணிகள் வரைபடத்தில் இல்லை என்றும் அவை வனவளத் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் என்றும் எங்களின் காணிகளை எல்லைப்படுத்துவதற்கு வனவளத் திணைக்களத்துக்கு துணை போகின்றனர். இது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ப-19)



கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்க வேண்டாம் எனக்கோரி மாளிகாவத்தை நீர்த் தொட்டியின் மேல் ஏறி நின்று நேற்று ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார். (ம)

## மன அழுத்தமா அழைக்குக 0710712345

யாழ்ப்பாணம், டிசெ. 15

இன்று காலை 6 மணி தொடக்கம் அபயம் தொலைபேசி சேவையானது நடைமுறைக்கு வருகின்றது.

நமது பகுதிகளில் தற்கொலை செய்பவர்களின் வீதமும் தற்கொலைக்கு முயற்சிப்பவர்களின் வீதமும் நாட்டின் சராசரி நிலையோடு ஒப்பிடுகையில் அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக சில பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளடங்களாக பலர் விரக்தி நிலை ஏற்படுகின்றபோது தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

பல்வேறு காரணங்களால் விரக்தி நிலை ஏற்பட்டு தற்கொலை செய்யும் எண்ணம் ஏற்படுகின்றது அச்சமயத்தில் குறிப்பிட்ட நபர்கள் அல்லது அவர்களுடன் நெருக்கமாக உள்ளவர்கள் இந்த சேவையை பெறுவதற்காக தொடர்பை ஏற்படுத்த முடியும். மேலும், எந்தவொரு நபரும் தனக்கு ஏதாவதொரு மனநெருக்கீடு ஏற்படும் போது உதவியைப் பெறுவது சம்பந்தமாக ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பை ஏற்படுத்துகின்றபோது எந்த நேரம் ஆயினும் மருத்துவ அதிகாரி ஒருவர் உடன் பதில் அளித்து உரிய ஆலோசனைகளையும் மேற்கொண்டு செய்ய வேண்டிய விடயங்களையும் தெளிவாகக் குறிப்பிடுவர். தொடர்பை ஏற்படுத்தும் நபர்கள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படமாட்டாது. (ம)

## முல்லைத்தீவு மீனவர்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தருக

*மீனவர் சமாசம் கோரிக்கை*

முல்லைத்தீவு, டிசெ.15

இந்தியாவுடன் எந்தவொரு பிரச்சனைக்கும் நாங்கள் செல்லத் தயாராக இல்லை எங்கள் மக்களின் வாழ்வாதாரம் சரியானமுறையில் பேணப்படவேண்டும். எனவே முல்லைத்தீவில் இடம்பெறும் கவனவீர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழிலாளர் சங்கங்களின் சமாச தலைவர் எம்.பி.ஜேன்சன் கேட்டுக்கொண்டார்.

மேலும், அண்மைக்காலமாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இலங்கையும் இந்தியாவும் இராஜ தந்திர ரீதியான உறவுகளைப் பேணவேண்டியது மிகமிக அவசியம் இந்தியாவுடன் எந்தவொரு பிரச்சினைக்கும் நாங்கள் செல்லத் தயாராக இல்லை. எங்கள் மக்களின் வாழ்வாதாரம் சரியானமுறையில் பேணப்படவேண்டும் என்று இந்த போராட்டத்தை நடத்துகின்றோம் இது தொடர்பாக உரிய அதிகாரிகள், கடற்றொழில் அமைச்சு, கடற்படையினர் என பல்வேறு தரப்பினரிடமும் முறை யிட்டிருந்த போதும், இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

எனவே இன்று மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். அந்தப் போராட்டத்துக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் - என்றார். (ப-19)



இளவாலை வருத்தப்படாத சங்கத்தின் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வலி. வடக்கு பிரதேச சபையின் வாகனத்தின் மூலம் சங்க உறுப்பினர்கள் இளவாலை கிராமத்தின் 7 கிராம அலுவலர் பிரிவுக்கும் சென்று கிராமத்தவர்கள் தயார் செய்த பொதிகளைச் சேகரித்திருந்தனர். (ப)

## பாடத்திட்டங்களில் நவீன மாற்றங்கள்!

கொழும்பு, டிசெ. 15

பாடத்திட்டங்களை நவீன முறைக்கேற்ற வகையில் மாற்றியமைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடத்திட்டங்களை நவீன முறைக்கேற்ப மாற்றியமைக்க வேண்டும் என்று பலரும் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் பலரிடம் இருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. கல்வி நிறுவனங்களில் இளம் சமூகத்தினருக்கு வழங்கப்படும் கல்விக்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் குறைவு.

ஆகையால் இதனை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மாவட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் - என்றார். (ம- இ)

## ஜப்பான் வர்த்தகரின் மகள் கடத்தல்: கைதான இளைஞனுக்குப் பிணை

கொழும்பு, டிசெ. 15

ஜப்பான் வர்த்தகரின் மகளைக் கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னதாக பிணை வழங்கப்பட்டபோதும், இளைஞன் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று அவர் விடுவிக்கப்பட்டார். ஜப்பானுக்கு சென்ற 23 வயது இளைஞன், அங்குள்ள வர்த்தகரின் 15 வயது மகளை இலங்கைக்கு கடத்தி வந்துள்ளார் என கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தகவல் வெளியானது. இருவரும் காதலிப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. அதன்பின்னர் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## ஜனாஸாக்களைத் தகனம் செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது!

கொழும்பு, டிசெ. 15

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் ஜனாசாக்களை தகனம் செய்வது குறித்த விவகாரத்துக்கு தீர்வைத் காணுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச சில நாள்களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து ஜனாஸாக்களை தகனம் செய்வதை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை புதைப்பதற்கு பொருத்தமான இடத்தை அடையாளப்படுத்துமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார் என்றும் தெரியவருகிறது. (ம-இ)

## சமுர்த்தி வங்கிச் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இணுவில் சமுர்த்தி வங்கியின் சேவைகள் நேற்றுமுன்தினம் முதல் 14 நாள்கள் வரை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் பகுதியைச் சேர்ந்த கொவிட்- 19 தொற்றுக்குள்ளானவரின் மனைவி இருதடவைகள் இணுவில் சமுர்த்தி வங்கிக்கு சென்று வந்துள்ளார். இதனையடுத்து அந்த வங்கியின் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (ஐ-39)

## சவூதியில் இருக்கும் இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை

கொழும்பு,டிசெ.15

சவூதி அரேபியாவில் உள்ள இலங்கையர்களை எதிர்வரும் வாரங்களில் நாட்டுக்கு அனுப்ப இலங்கை தூதரகம் திட்டமிட்டுள்ளது.

**சவூதி அரேபியாவில் தற்போது ஒரு** லட்சத்து 35ஆயிரம் இலங்கையர்கள் நாடு திரும்புவதற்காக காத்திருக்கின்றனர். இவர்களில் 4 ஆயிரம் பேர் தற்போது நாடு திரும்பு வதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். **நாடு திரும்பவுள்ள இலங்கையர்க**ளில் பெரும்பாலானோர் மருத்துவ ரீதியான சிக்கல்களால் பாதிக்கப்பட்டவர்கள்.

இவர்கள் தூதரகத்தால் முன்னுரிமையளிக்கப்பட்டு நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர். (ஐ-இ)

# பொலிஸாரின் அசமந்தம் காரணமாக கோவில் நிர்வாகத்துக்கு பிடியாணை

**வவுனியா, டிசெ. 15**

**வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகத்தினருக்கு எதிரான வழக்கு தொடர்பில், பொலிஸார் உரியமுறையில் அறிவிக்காமையால் கோவில் நிர்வாகத்தினருக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.**

நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்கள த்தினரும் நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்தனர்.

தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அது வவுனியா நீதிமன்றில் கடந்த ஒக்ரோபரில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கோவில் சார்பில் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ்செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் முற்பட்டிருந்தனர்.

நீதிமன்றில் முற்பட்டிருந்த பொலிஸார் கோவில் நிர்வாகத்தினரைக் கைதுசெய்யவேண்டும் என்றும் தொல்பொருள்கள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர்.

எனினும், அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் கோவில் நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டிருந்தனர். கடந்த நவம்பர் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நவம்பர் 6 ஆம் திகதி கோவில் நிர்வாகத்தினர் நீதிமன்றில் முற்பட்டனர். எனினும், கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக அநேகமான வழக்குகள் எதிர்வரும் தை மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தொல் பொருள் திணைக்களம் சட்டத்தரணிகளை ஏற்பாடுசெய்து அவர்கள் ஊடாக கோவில் நிர்வாகத்தினருக்கு எதிரான வழக்கை முன்னரே அழைக்குமாறு நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்திருந்தனர்.

அதன்படி டிசெம்பர் 11 ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டிருந்தது. எனினும், டிசெம்பர் 11ஆம் திகதி கோவில் நிர்வாகத்தினர் நீதிமன்றில் சமூகமளித்திருக்கவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

"வழக்கு திகதி மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் தமக்குத் தெரியப்படுத்தவில்லை.

வேறு வகையிலும் தெரியப்படுத்தவில்லை. நாங்கள் அறிந்திருக்கவுமில்லையே" என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-110)

## 2,404 கிலோ மஞ்சளுடன் இந்தியர்கள் மூவர் கைது

புத்தளம், டிசெ.15

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 2 ஆயிரத்து 404 கிலோ கிராம் மஞ்சள் புத்தளம் கல்லாறு கடற்படை முகாமுக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் முன்னெடுக்கப் பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டுள்ளது.


10 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த மஞ்சளைக் கடத்திவரப் பயன்படுத்தப்பட்ட 'டீச்' படகுடன் இந்தியர்கள் மூவரும் இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ந-இ)

## தபால் திணைக்களத்தால் வீடுகளுக்கு பொதிகள்

கொழும்பு, டிசெ.15

பொதிகளை வீடுகளுக்கே கொண்டு சென்று விநியோகிக்கும் சேவையை தபால் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் சேவையை தபால் திணைக்களம் இன்று முதல் அமுல்படுத்த தீர்மானித்துள்ளது என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டத்தில் 50 ஆயிரம் ரூபா வரையான பெறுமதியுடைய பொருள்களை வீடுகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (ந-இ)



## கிளி.சேவைச்சந்தையில் 45 பேருக்கு பி.சி.ஆர்.!!

கிளிநொச்சி, டிசெ.15

கிளிநொச்சி சேவைச்சந்தைக்கு வருகை தந்த வெளிமாவட்ட சாரதிகள் மற்றும் சந்தை வியாபாரிகளிடமிருந்து பி.சி.ஆர் மாதிரிகள் நேற்று பெறப்பட்டன.

இவ்வாறு 45 பேரிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் இந்த மாதிரிகள் நேற்று பெறப்பட்டது. (ந-6,214)

## தனிமைப்படுத்தல் முகாமில் திருடிய 4 நோயாளிகள் கைது

மட்டக்களப்பு, டிசெ.15

வாழைச்சேனை புனானை தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிகிச்சைப் பெற்றுவந்த நான்கு நோயாளிகள் அங்குள்ள இலத்திரனியல் பொருள்கள் சிலவற்றை களவாடியுள்ளனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-இ)

## ஜனாஸாக்களை அடக்கம்செய்ய அனுமதி வழங்க வேண்டும்

### கல்முனையில் போராட்டம்

கொழும்பு, டிசெ.15

கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி கல்முனையில் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

தாருஸபா அமையம் மற்றும் அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா அமைப்பினர் உட்பட கல்முனை பொது அமைப்புக்கள் பல இணைந்து முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனும் கோரிக்கையுடன் "கவன் சீலை போராட்டம்" எனும் போராட்டத்தை ஞாயிற்றுக்கிழமை மாலை முன்னெடுத்தனர். (ந-இ)

## கொரோனா கட்டுப்படுத்தலில் தெளிவு வேண்டும்

### அரசை சாடுகிறார் ரணில்

கொழும்பு, டிசெ.15

கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். பியகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், தொற்று அதிகரித்துவரும் நிலையில், அங்கீகரிக்கப்படாத மருந்துகளை அமைச்சர்கள் பெற்றுக்கொள்வது தவறானது என சுட்டிக்காட்டியுள்ள அவர், இது தொடர்பில் ஆராய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் நாட்டிலேயே உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## 100 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்!

கொழும்பு, டிசெ.15

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 100 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும், 3 விசேட விமானங்கள் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ந-இ)

## சிங்கப்பூருக்கான இலங்கையின் விமான சேவை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.15

இலங்கை மற்றும் சிங் கப்பூருக்கு இடையிலான விமான சேவை இந்த மாதம் 18ஆம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளது என ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்கமைய, விமான சேவையை வாரத்துக்கு மூன்றாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## மணல் அகழ்வுக்கு எதிரான தீர்மானத்தை அமுல்படுத்துக!

### சுற்றாடல் அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, டிசெ.15

கள ஆய்வின்றி காணிகளில் மண் அகழ்வதற்கான அனுமதி வழங்குவதை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த அனுமதிப்பத்திரங்கள், தென்னந்தோட்டங்களில் மணல் அகழ்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன என்று சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தென்னந்தோட்டங்களில் தரிசு நிலங்கள் காணப்படினும், அங்கு மணல் மற்றும் மண் அகழ்வதற்கான அனுமதி கோரப்பட்டால், அந்தப் பகுதிகள் வேண்டுமென்றே தரிசாக விடப்பட் டுள்ளனவா என்பதைக் கண்டறிய நடவடிக்கை எடுக்குமாறும் சுற்றாடல் அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## என்னவோ நடக்குது....!

மினுவாங்கொட, பேலியகொட கொரோனாக் கொத்தணி வரிசையில் யாழ்ப்பாணத்திலும் மருதானர்மடம் கொத்தணி தடுக்கமுடியாத அளவுக்கு பரவியிருக்கிறது. தொடர்ச்சியாக நடத்தப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளில் பரவலாகக் கண்டு பிடிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை இதனையே காட்டி நிற்கின்றது. என்னதான் சுகாதாரத்துறையினர் உண்மையான தொற்றாளர்களின் எண்ணிக்கையை ஆரம்பத்தில் பொத்தி வைத்திருந்தபோதும், அவர்களையும் மீறி; பீரிட்டுக்கொண்டு வெளியான சரியான தொற்றாளர்களின் சரியான தரவுகள் மக்களிடையே பெரும் அதிர்வுகளை உண்டாக்கின.

32 தொற்றாளர்கள் மருதனார்மடம் சந்தையை மையப்படுத்தி கண்டுபிடிக்கப்பட்டமை சாதாரண விடயமல்ல. யாழ். மாவட்டச் செயலரின் தகவலின்படி இதுவரை ஆயிரத்து 144 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தளவுதூரம் கொரோனா கட்டுப்பாடில்லாமல் யாழ்ப்பாணத்தில் ஓடிவிளையாடிக் கொண்டிருக்க, அரச நிர்வாகமோ தன் வழக்கமான அபத்தப் பல்லவியை பாடிக் கொண்டிருக்கிறது.

மருதனார்மடம் கொத்தணியில் 32 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டவுடன், உடனடியாக உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 30 கிராம சேவகர்கள் பிரிவுகளும் முடக்கப்பட்டன. இருப்பினும் அடுத்தநாளே அந்த முடக்கம் நீக்கப்பட்டு மக்களுக்கு அதிர்ச்சி வைத்தியமளித்தது அரசு. கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்படும் பகுதியை முடக்கி, தொற்றாளருடன் தொடர்புடையோரை இனங்கண்டு, அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு, இனிமேல் தொற்று ஏற்பட வாய்ப்பில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அந்தப் பகுதியில் அமுல்படுத்தப்பட்ட முடக்க நிலை தளர்த்தப்படும்.

இதுவே கொரோனாத் தடுப்புச் செயலணியின் அண்மைக் கால உத்தியாக இருந்தது. இதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டையும் முடக்காமல் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாத்திரம் முடக்கி, ஏனையோரின் இயல்பு வாழ்வில் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்திலோ நிலைமை கட்டுமீறிப் போய்விட்டதால், மாவட்டம் முழுதையும் லொக் டவுண் பண்ணினால் மாத்திரமே கொரோனாவைத் தடுக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதாலேயே, அதிக ஆபத்தான பகுதியான உடுவில் பிரதேச செயலர் பிரிவு போடப்பட்ட முடக்கத்தையும் விலக்கியுள்ளார்களாம். ஆக, கொரோனாக் கொத்தணி மையம் கொண்டுள்ள இடத்தை திறந்து விட்டதன் மூலம், இன்னும் சமூகத் தொற்றாக யாழ்ப்பாணத்தில் கொரோனா உருவெடுக்கவே அரசு வழிசமைத்துள்ளது.

ஆனையிறவு, சங்குப்பிட்டி ஆகிய இரு இடங்களிலும் இருக்கும் சோதனைச் சாவடிகளில், வெளி மாவட்டங்களில் இருந்து வருவோர் பி.சி.ஆர் பரிசோதனை செய்த சான்றிதழைக் கொண்டு வந்தாலே உள்நுழைய அனுமதி வழங்கப்படும் என்று கூறியிருந்தால், இப்படி யாழ்ப்பாணத்துக்குள் கொரோனா உள்நுழைந்திருக்க முடியாது. உள்ளே கொரோனா வந்து பெருகும்வரை கொட்டாவி விட்டுக் கொண்டு வெட்டித்தனமாக இருந்தவர்கள், இப்போது புதிதாகக் கொத்தணி உருவானவுடன் பதறித்துடிப்பது போல பாசாங்கு பண்ணுகிறார்கள். வெள்ளம் வரும்வரை அதை வேடிக்கை பார்த்து விட்டு, எல்லாவற்றையும் அது மூழ்கடித்த பின்னர் அணைகட்டப் புறப்பட்டது போல இருக்கிறது சுகாதார மற்றும் பாதுகாப்புத்துறையின் செயற்பாடுகள். போதாக்குறைக்கு மாவட்ட நிர்வாகமும் மேலிடத்து உத்தரவுப்படி, கொரோனா மையப் பகுதியில் போடப்பட்ட லொ டவுணை போட்ட கையோடு நீக்கி இன்னும் நிலைமையைக் கேலிக்குரியதாக்குகின்றது.

இப்போது மக்கள் எவரையும் நம்பத் தயாராகவில்லை. தங்கள் பாதுகாப்பை அவர்கள் தாமே தான் உறுதி செய்ய வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். சுய தனிமைப்படுத்தலும், அநாவசிய நடமாட்டங்களைக் குறைத்தலும், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பேணுதலுமே தங்களைக் காக்கும் கருவிகள் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து நடந்தால், யாழ்ப்பாணத்தில் தோன்றியுள்ள கொத்தணியை இன்னும் வீரியமாகப் பரவலாகாமல் பார்த்துக் கொள்ளமுடியும்.

நிலைமையின் விபரீதம் புரியாமல், தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளைக் கூட முடக்காமல் அரசு ஏதோ அழுகுணி ஆட்டம் போடுகின்றது. தென்னிலங்கையில் உடனேயே அந்தந்தப் பகுதிகளை முடக்கி, கொரோனாவைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் காற்றில் பறக்கவிட்ட மர்மம் மக்களுக்கு இன்னும் புரியவேயில்லை. என்னவோ நடக்குது. மர்மமாய் இருக்குது என்று தான் சொல்லத் தோன்றுகின்றது.

கொரோனா பெருந்தொற்று

# சோதனைக்கு உடன்படாவிடில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்



கொழும்பு, டிசெ. 15

**கொரோனா பெருந்தொற்றுப் பரிசோதனைகளுக்கு உடன்படாத மற்றும் ஒத்துழைக்காத நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள அட்டலுகம போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று தெரியவந்துள்ளது.

இது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பான செயற்பாடாகும். அதனால் இத்தகைய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடியும். இதன்போது அவர்களது சொத்துக்களை பயன்படுத்த முடியாத வகையில் தடை முத்திரை குத்தவும் அனுமதியுள்ளது. அதனால் சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ம-இ)

## இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு

### கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15



இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு நாடு முழுவதும் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் தேசிய வேலைத்திட்டம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொழிலின்றி இருக்கும் அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம். மிக விரைவில் அனைத்து இடங்களிலும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் - என்றார். (ம- இ)

## ஜாதிக ஹெல உறுமயவின் தலைவராக விமலசார தேரர்

கொழும்பு, டிசெ. 15

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் புதிய தலைவராக ஹெடிகல்லே விமலசார தேரரும், பொதுச் செயலாளராக பந்துல சந்திரசேகர என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உப தலைவராக தயா பெரேரா, பிரதிச் செயலாளராக சட்டத்தரணி டியூட்டர் பெரேரா, பொருளாளராக அனில் ஜயவர்தன, தேசிய அமைப்பாளராக மகேந்திர ஜயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ள துடன் 25 பேர் கொண்ட புதிய மத்திய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுமுன்தினம் அந்தப் பதவியில் இருந்தும் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகினார். இதையடுத்தே இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-இ)

# வலிகாமம் கிழக்கு பிரதேச மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

### வலி. பிரதேச சபைத் தவிசாளர் வேண்டுகோள்


யாழ்ப்பாணம், டிசெ.15

வலி.கிழக்கு மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய மருதனார்மடம் சந்தையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதால் வலி.கிழக்கு மக்கள் அதிக சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்று தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடரப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது வலிகாமம் கிழக்கில் இருந்து பெருந்தொகையான விவசாய உற்பத்திப் பொருள்கள் மருதனார்மடம் சந்தைக்கே எடுத்துச் செல்லப்படுகின்றன. வலி கிழக்கில் 18 ஆயிரம் விவசாயிகள் உள்ள நிலையில் அவர்களில் அதிகளவானோர் சந்தைத்தேவைக்கு மருதனார்மடம் சந்தையுடன் நேரடித் தொடர்பு பட்டுள்ளனர். இதனால் வலிகாமம் கிழக்கு பகுதி மக்கள் உயர்ந்த அளவில் சமூகப் பொறுப்புடன் செயற்பட்டால் மட்டுமே தம்மையும் ஏனையோரையும் பாதுகாக்க முடியும்.

தற்போது வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புபட்ட 25 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. எமது பிரதேச மக்களில் பலர் மருதனார்மடம் சந்தையுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள நிலையில் நிலைமை சிக்கலடைந்தால் ஒத்துழைப்புடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் எமது பிரதேச சபை தொழிற்படும் - என்றார். (ஐ)



## ஆக்கிரமிக்கப்படுகிறது வவு. பட்டாணிச்சூர் குளம்

*நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை*

வவுனியா, டிசெ.15

வவுனியா பட்டாணிச்சூர் குளத்தின் அருகில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதால், மழை காலங்களில் குளத்திலிருந்து வான் பாய்ந்து வரும் நீர் வழிந்து ஓட தடை ஏற்படுவதுடன், வெள்ளநீர் தேங்கி இப்பகுதியில் உள்ள மக்களுக்கு பல்வேறு இடர்களை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூர் குளத்தை அண்மித்த பகுதி உமுறுது வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இது குளப்பகுதியாகும். எனினும் சிலர் இப் பகுதியில் அரசாங்கத்தின் அனுமதியின்றி சட்ட விரோதமாக கடைகள் கட்டியும் குடியிருப்புக்களை அமைத்தும் வருகின்றனர். இந்த நிலை தொடருமாயின் பட்டாணிச்சூர் கிராமம் வெள்ளத்தில் மூழ்கும் என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-402)

# இரண்டு மாதங்களில் 139 இறப்புக்கள் பதிவு

கொழும்பு, டிசெ.15

**இலங்கையில் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் இன்றுவரை கொரோனாத் தொற்றால் 139 இறப்புக்கள் பதிவாகியுள்ளன என்று கொரோனா கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.**



கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் 13 பேர் மட்டுமே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்றும் அறிவித்துள்ளது.

2020 ஒக்ரோபர் 4 ஆம் திகதிக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட இறப்புகளில் 63 பேர் அதாவது 47.48% வீதமானவர்கள் 71 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆவர். அத்தோடு 20.86 வீதமான 61 முதல் 70 வயதுக்கு இடைப்பட்ட 27 பேரும் 16.54 வீதமான 51 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 22 பேரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். மேலும் 41 முதல் 50 வயதுக்கு இடைப்பட்ட 13 பேரும் 31 முதல் 40 வயதுக்குஇடைப்பட்ட 04 பேரும் 10 முதல் 30 வயதுக்கு உட்பட 3 பேரும் ஒரு குழந்தையும் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (ப)

## வடக்கு மாகாண சபை முன்பாக பயிலுநர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.15

வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

2019ஆம் ஆண்டு சேர்த்துக்கொள்ளப்பட்ட 14 ஆயிரத்து 283 பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரப்படுத்தாமை தொடர்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என்று ஒருங்கிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 10 மணிக்கு வட மாகாண சபை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)



## கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

"வருமுன் காத்து சமூகத்தை பாதுகாப்போம்" கோவிட் 19 விழிப்புணர்வு செயற்றிட்டம் சமத்துவ கட்சியின் யாழ்ப்பாண இளைஞர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வியங்காடு சந்தை, நாவாந்துறை சந்தை, கொட்டடி சந்தை, உள்ளிட்ட பல இடங்களில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், இலவசமாக முகக்கவசங்களும் வழங்கப்பட்டன. (ஐ-214)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

தெல்லிப்பழை,டிசெ.15

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம்,இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து மாபெரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை நேற்றுமுன் தினம் முன்னெடுத்தன. கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகி அதனை அண்டிய பகுதிகளான நகுலேஸ்வரம், கூவில் மற்றும் மயிலங்கூடல் போன்ற பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான பா.மரியதாஸ், கெ.பிரதீபன் மற்றும் ச.சஜீவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-222)

## பாலம் தாழிறங்கியதால் போக்குவரத்துப் பாதிப்பு

*கிளி வட்டக்கச்சி வீதியில் இந்த நிலை*

கிளிநொச்சி, டிசெ.15

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியில் உள்ள பாலம் ஒன்று தாழிறங்கியதன் காரணமாக அந்த வீதியூடாகப் பயணித்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ் வீதியூடாகப் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று தாழ் இறங்கியதன் காரணமாக போக்குவரத்துச் செய்ய முடியாது சுமார் 13 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சியூடாகப் பயணித்த வாகனச் சாரதிகள் ஏ-35 வீதியை அடைய 500 மீற்றர் தூரம் கிட்டிய நிலையிலிருந்தும் பிரதான வீதியைச் சென்றடைய முடியாத நிலையில் மீண்டும் கிளிநொச்சி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் மக்கள் நலன் சார்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-113)


## மோதல் சம்பவத்தில் எட்டு பேர் காயம்

கேகாலை,டிசெ.15

கேகாலை - கோலிந்த தோட்டத்தில் நேற்று இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 8 பேர் காயமடைந்த நிலையில் கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. குறித்த தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு தேர்த்திருவிழா நடைபெற்றது. (ஐ-இ)

## அதிகரித்துள்ளது தேங்காய் விலை



கொழும்பு, டிசெ.15

இலங்கையில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது என்று சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில பிரதேசங்களில் தேங்காய் ஒன்றின் விலை 120 ரூபா வரை அதிகரித்துள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது. சமகாலத்தில் தேங்காய்களின் எண்ணிக்கையில் மிகவும் குறைவு ஏற்பட்டுள்ளது எனவும் அணில்கள் மற்றும் குரங்குகளால் தென்னம் பயிர்செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாள்களாக தேங்காய்களுக்கு நிர்ணய விலை அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட போதிலும் தற்போது அவை செயற்படுத்தப்படுவதில்லை எனக் கூறப்படுகின்றது. (ப)

## தேங்கிய வழக்குகள் துரித கதியில் விசாரணை

*நீதி அமைச்சர் முடிவு*

கொழும்பு, டிசெ.15

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் பல்லாயிரக் கணக்கான வழக்குகளைத் துரித கதியில் விசாரணை செய்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா பரவல் நிலைமையை அடுத்து இந்த ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படவுள்ளன. இதனடிப்படையில் உயர்நீதிமன்றத்தில் தொடங்கி ஏனைய நீதிமன்றங்களிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மெய்நிகர் நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும் இந்த நடைமுறை அடுத்த ஆண்டு ஆரம்பம் முதல் நடைமுறைக்கு வரும். இது தொடர்பான சட்ட வரைவை தற்போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தயாரித்து வருகின்றனர். நாளுமன்றத்தில் யோசனை ஒன்றை முன்வைத்து இந்த விடயம் நிறை வேற்றப்படும் என்றார். (ப)

## குருதிக்கொடை முகாம்

கோண்டாவில்,டிசெ.15

கோண்டாவில் கிழக்கு அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டு கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் இருபாலை வீதி கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக ரீசேட்டுகள் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-222)

## மன்னார் மாவட்டத்தில்

# கத்தரி, பயிற்றை செடிகளில் புதிய வகை நோய்த் தொற்று



**மன்னார், டிசெ.15**
**புரேவி புயல் மற்றும் மழையின் பின்னர் தற்போது கத்திரி மற்றும் பயிற்றைச் செடிகளில் புது வகை நோய் தொற்றி வருகின்றது என தோட்டச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
புரேவி புயல் மற்றும் மழையின் பின்னர் ஏற்பட்டுள்ள இந்த நோய்த் தாக்கத்தால் கத்திரி மற்றும் பயிற்றை செடிகள் வாடிக்காணப்படுவதுடன், இலைகள் மஞ்சள் நிறமாக பழுத்து விழுகின்றன. இதனால் செடிகளில் காய்கள் மிகவும் குறைவாகவே காய்க்கின்றன.
நீண்டகாலமாக பயிற்றை மற்றும் கத்திரிகளை பயிர் செய்து வருகிறோம். தற்போதைய மழையின் பின்னரே இவ்வாறான நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வருடத்தின் தோட்டப் பயிர்ச் செய்கையும் மிகப் பெரும் நஷ்டமாகவே உள்ளது. என்றனர்.
இந்த நோய்த் தாக்கம் மன்னார் இராசமடு மடுக்கரைப் பகுதியில் உள்ள தோட்டங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-213)

## நாடிக்கு மாஸ்க் அணிந்தவர் கைது

சாவகச்சேரி, டிசெ. 15
யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம் கொரோனா உப கொத்தணி உருவாகியுள்ள நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தைக்குள் நாடிக்கு முகக்கவசம் அணிந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று காலை சாவகச்சேரி சந்தையில் இடம் பெற்றது. பொதுச் சந்தைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கண்காணிப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.



கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் உரிய வகையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதை முழுமையாகக் கண்காணித்து வருகின்றனர். இந்த நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு நாடிக்கு முகக்கவசம் அணிந்து வந்தவரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். (ஒ.9)

## மரண அறிவித்தல்

பிறப்பு
12 . 04 . 1939



இறப்பு
14 . 12 . 2020

### பொன்னையா அன்னம்மா

கச்சேரி நல்லூர் வீதி, மூத்த விநாயகர் வீதி, 1ம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னம்மா அவர்கள் நேற்று (14.12.2020) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராசரெத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான துரைராசா சின்னத்துரை மற்றும் செல்வமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மலோசினி (பத்மா), குகநேசன் (குகன்-தொழில்நுட்பவியலாளர், விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வளர்மதியின் (சுமதி-இணுவில்) அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விஜியலட்சுமி, புவனேஸ்வரி ஜெயலட்சுமி நவரத்தினராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.51/6, 1ம் ஒழுங்கை,
மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி.

தகவல் :
குகனேசன் - மகன்
077 979 7448

## கண்டி நிலநடுக்கங்கள்; அறிக்கை மாத இறுதியில்

கொழும்பு, டிசெ.15
கண்டியின் திகன பகுதியில் பதிவான நிலநடுக்கங்கள் தொடர்பான அறிக்கை இந்த மாத இறுதியில் ஆய்வுக் குழுவால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
குறுகிய காலத்துக்குள் அந்த பகுதியில் மூன்று நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. அமைச்சர் மஹிந்த அமரவீரவால் புவி சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்துக்கு இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.
இதையடுத்து 5 பேர் அடங்கிய விசேட நிபுணர்கள் குழு திகன பகுதிக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டது. பூமியின் உட்புறத்தில் உள்ள சுண்ணாம்பு பாறைகளில் ஏற்பட்டுள்ள அழுத்தம் காரணமாக இந்த நடுக்கம் பதிவாகியுள்ளது என ஆரம்பகட்ட விசாரணை களில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## விதிகளை மீறிய 41 பேர் கைது

கொழும்பு, டிசெ.15
முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட் டுக்களில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 390 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)



## யானை - மொட்டு மோதல்

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கும் இடையே மஹியங்கன பொலிஸ் நிலையத்துக்கு முன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.
மொட்டுக்கட்சியின் வசமுள்ள மஹியங்கன பிரதேச சபையின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்திலேயே இன்னுமொரு மோதல் வரவு - செலவுத் திட்டம் 2ஆவது முறையாக தோல்வி கண்டது. அதையடுத்து அங்கு இடம்பெற்ற மோதல் தொடர்பாக விசாரணை நடத்த சம்பந்தப்பட்ட இடம்பெற்றுள்ளதுடன் அதில் 12 பேர் காயமடைந்தனர். (வ-இ)

## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல:J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 28.02.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆந் திகதி (15.01.2021)இற்கு முன்னர் மீட்கவும்.
மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2021 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
குறிப்பு:- 2019 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 28 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல 370.கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
0214900311

உரிமையாளர்,
இல 09. கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.
0212225046

## நீதிமன்ற நடவடிக்கையை சட்டத்தரணிகள் தவிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15
மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நேற்றுத் திங்கட்கிழமை முதல் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருக்கத் தீர்மானித்துள்ளோம் என்று சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர்.
இந்த அறிவிப்பை மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணி சோ.தேவராஜா மற்றும் செயலர், சட்டத்தரணி க.சுகாஷ் இருவரும் இணைந்து வெளியிட்டுள்ளனர். நீதிமன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் பருவகால விடுமுறைக்காக இடைநிறுத்தப்படவுள்ள நிலையில் 4 நாள்கள் முன்னதாக சட்டத்தரணிகள் சங்கத்தினர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். (ஒ.5)

# தமிழ் மீனவர்களுக்கு உதவும் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு

## மாவை.சேனாதிராசா சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 15
இலங்கைத் தமிழ் மீனவர்க ளைப் பாதுகாக்கின்ற பொறுப்பும், அவர்க ளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப் ப்புகின்ற பொறுப்பும் இந்திய அர சுக்கு உள்ளதென, இந்தியாவின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடம் இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா வலி யுறுத்தியுள்ளார்.
முல்லைத்தீவு மீனவர்கள் இந்திய இழுவைப் படகுகளால் எதிர்நோக் கும் பிரச்சினைகள் தொடர்பில் முன் னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமை யிலான குழுவினர் மாவை சோனா திராசாவை நேற்று சந்தித்து கலந்து ரையாடியிருந்தனர்.
கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனுக்கு இந்தியாவிலிருந்து பொறுப்புவாய்ந்த அதிகாரி தொலை பேசி அழைப்பை ஏற்படுத்தியிருந் தார். இலங்கை மீனவர்களின் கோரிக்கை நியாயமானது எனவும் அதனைத் தாம் ஏற்றுக்கொள் கிறேன் என தெரிவித்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுகின்றேன் எனவும் தெரிவித்தார்.
அதனைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா வும்கலந்துரையாடினார். இதன் போதே இலங்கைத் தமிழ் மீனவர்க ளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப் பும் பொறுப்பு இந்தியாவுக்கு உண் டென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ,246)

# ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு தயார்

கொழும்பு, டிசெ. 15
தலைவர் உட்பட கட்சிநிர்வாகிகளை வருடா வருடம் தெரிவுசெய்யும் விதத்திலான ஜனநாயக வியூ கத் தின் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு தயாரிக் கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சி யின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பில் தலைவர் உட்பட நிர்வாக உறுப்பினர்களின் பதவிக் காலம் ஒரு வருடமாக மட்டுப்படுத்தப்பட் டுள்ளது. வருடா வருடம் நிறை வேற்றுக்குழு ஊடாக தலைவர் பதவி உட்பட நிர்வாக பதவிகளுக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் பட்டு, வருடாந்த சம்மேளனத்தில் அதற்கு அனுமதி பெறவேண்டும்.
இவ்வாறு ஜனநாயக வியூகத்தின் அடிப்படையிலேயே யாப்பு தயாரிக் கப்பட்டுள்ளது. இதன்மூலம் நம் பிக்கையும் கட்டியெழுப்பட்டுள்ளது.
செயற்குழு இருந்தாலும் நிறை வேற்றுக்குழுவே பலம்பொருந்திய கட்டமைப்பாக கட்சியில் விளங் கும், என்றார். (ஒ,44)

# மிலேனியம் சவாலில் இலங்கை தொடரும்

## உறுதிப்படுத்தியது அமெரிக்கா

கொழும்பு, டிசெ.15
மிலேனியம் சவால் உடன்படிக்கையில் இலங்கை தொடர்ந்தும் உள்ளது என அமெ ரிக்க இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள் ளது. வொஷிங்டன் டி.சி.யில் இன்று எம்.சி.சி தொடர்பான கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தத் திட்டத்தை வழங்கும் பட்டியலில் இலங்கை உள் ளது.
ஆயினும் கூட்டத்தில் எட்டப்படும் முடிவுகள் தொடர்பில் ஊகிக்க முடியாது என்று அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர் நான்சி வென்ஹோர்ன் தெரிவித்துள்ளார். பொருளாதார வளர்ச்சியின் மூலம் வறுமையைக் குறைக்கும் நோக்கில் 480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கும் இந்த ஒப்பந்தத்தை தற்போதைய அரசு 2019 டிசெம்பரில் நிறுத்தி, அதை மீளாய்வு செய்ய நான்கு பேர் கொண்ட குழுவை நியமித்தது. அதன் மீளாய்வு அறிக்கை கடந்த ஜூன் மாதம் பிரதமர் மற்றும் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.
இந்நிலையில் எம்.சி.சி. மானியப் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டது என தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், இலங்கை இந் தத் திட்டத்திலிருந்து நீக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

# 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு: முஸ்லிம் எம்.பிக்கள் விளக்கம்

கொழும்பு, டிசெ.15
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பத விவழி உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய கூட்டம், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் பணிப்பு ரைக்கு அமைய, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெற்றது.
இக் கூட்டத்தில் அரசமைப்பின் 20ஆவது திருத் தத்துக்கு ஆதரவாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் வாக்களித்தமை மற்றும் அதன் பின்னரான அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கம் கோரப்பட்டது. இதன் போது, சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கள் அதற்கான காரணங்களை வாய்மூலமாகத் தெரிவித்தனர். இந்த விடயத்தில் முக்கியமான முடிவை மேற்கொள்வதற்கு, உரிய காரணங்கள் எழுத்து மூலம் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கட்சியின் தலைவருக்கும், செயலாள ருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.
அதன் பின்னர், சம்மந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் மீதும் மேற்கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கை குறித்து கட்சி முடி வெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# பளை சந்தையில் இன்று பி.சி.ஆர்.



கிளிநொச்சி, டிசெ. 15
மருதனார் மடம் சந்தையின் எதி ரொலியாக பளை பொதுச் சந்தையில் சகல வியாபாரிகளிடமும் பி.சி.ஆர். பரிசோதனை இன்று மேற் கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.
மரக்கறி, மீன், இறைச்சி மற்றும் இதர விற்பனைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 40 பேருக்கு இவ்வாறு பரிசோதனை மேற் கொள்ளப்படவுள்ளது. (து-6)

# வவுனியா நீதிமன்ற செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டது

வவுனியா, டிசெ. 15
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட திருகோ ணமலையை சேர்ந்தவருக்கு கொவிட் 19 தொற்று நேற்று இனங்காணப்பட்டுள்ள நிலை யில் வவுனியா நீதிவான் நீதி மன்றின் செயற்பாடுகள் மட்டுப் படுத்தப்பட்டது. வவுனியா நீதி வான் நீதிமன்றத்தின் அநேக மான வழக்குகள் தவணையிடப் பட்டது. சிலர் சொந்தப்பிணை யிலும் விடுவிக்கப்பட்டனர்.
இதேவேளை நீதிமன்றத்தில் தொற்று நீக்கும் செயற்பாடுக ளும் முன்னெடுக்கப்பட்டன. (ஒ,110)

# மரண அறிவித்தல்

## திருமதி யோகநாயகி சிவசுப்பிரமணியம்

(ஓய்வுநிலை ஆசிரியர் அச்சுவேலி புனித தெரேசாள் மகளீர் கல்லூரி)



பிறப்பு 21.12.1938 — இறப்பு 13.12.2020

தாவடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகநாயகி சிவசுப்பிரமணியம் அவர்கள் 13.12.2020 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் பிள்ளை- நல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. க.சிவசுப்பிரமணியம் (முன்னாள் அதிபர் அச்சுவேலி மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், முகுந்தன் (Norway), நிரூபன் (Canada), பிரதீபா (Australiya) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரொனி, சுபா, செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், ஜயாத்துரை, நவரத்தினம், நாகரத்தினம், ராசம்மா மற்றும் திருச்செல்வம், விஜயலஷ்மியின் அன்புச் சகோதரியும், சிவஞானசுந்தரம், சிவபாலசுந்தரம், சிவஈஸ்வரி, காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி அவர்களின் பாசமிகு மைத்துனியும், ஜீலியர், டானியல், நிகோலி, சுவேதா, சங்கவி, கபிஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2020 செவ்வாய்க்கிழமை கனடா நேரப்படி 5.30 am முதல் 7.30 am வரை Chapel Ridge, 8911 Woodbine Avenue, Markham, Ontario, L3R 5GI இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
திருமதி சி. நவரத்தினம்
சிவகிரி, அச்சுவேலி தெற்கு.

077 558 7144

# ரி.என்.ரி. வெடிபொருளை கிரைண்டரில் அரைத்த நபர்

## எட்டு பேர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 15
டைனமற் தயாரிப்பதற்காக ரி.என்.ரி. வெடிபொருளை கிரைண்டரில் அரைத்த நபர் உள்ளிட்ட 8 பேர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுளார் என பொலிஸார் தெரிவித்தனர்.
குருநகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு கல்லுத் தன்மையாகக் காணப் பட்ட ரி.என்.ரி. வெடிமருந்தை கிரைண்டரில் போட்டு தூளாக்க ஒருவர் முயன் றுள்ளார். அது வெடித்துள்ளது. இதனால் 8 பேர் வரையில் காய மடைந்தனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எரிபொருள் சிலிண்டர் வெடித்து காயம் ஏற்பட்டது எனத் தெரிவித்து சேர்க்கப்பட்டிருந்தாலும் பொலிஸாரின் விசாரணைகளில் ரி.என்.ரி. வெடிபொருளை, டைனமற் தயாரிக்க தூளாக் கியமை தெரியவந்துள்ளது. (ஒ,5)

## கல்முனையை மையப்படுத்தி இஸ்லாமிய இனவாதக் குழு!

*கொழும்பு ஊடகம் பரபரப்புத் தகவல்*

கொழும்பு, டிசெ. 15

கிழக்கு மாகாணம் கல்முனையை தலைமையக மாகக் கொண்டு இஸ்லாமிய இனவாத குழுவொன்று உருவாகி வருகின்றமை தொடர்பில் இராணுவ புல னாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனமொன்றுடன் இணைந்து 2004ஆம் ஆண்டு சுனாமி இடருக்காக சேர்க்கப்பட்ட பணத்தின் ஊடாக, முறையற்ற விதத்தில் இந்த அமைப்பை அவர் ஆரம்பித்துள்ளார் என விசா ரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் சுமார் 300 வரையான உறுப்பினர் கள் இணைந்து கொண்டுள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது. அத்துடன், குறித்த அமைப்புடன் ஆயி ரக்கணக்கானோர் இணைந்து செயற்பட்டு வருகின்ற னர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## கொழும்பு மருந்துவமனைக்குள் கொரோனாத் தொற்று ஊடுருவல்

கொழும்பு, டிசெ. 15

கொழும்பு தேசிய மருத்துவமனையின் சமையல் அறையில் கொரோனாத் தொற்றாளர்கள் அவதானிக் கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பாரதூரமான நிலைமை உருவாகியுள்ளது என்று இலங்கை சுகா தார தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனையின் சமையல் அறையில் முதலாவது கொரோனா நோயாளி உறுதி செய்யப்பட்ட பின்னர், ஏனைய சமையல் ஊழியர்களுக்கு கொரோனா பரி சோதனை நடத்ததன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என சம்மேளனத்தின் தலைவர் எஸ். பி.மெதிவத்த கூறியுள்ளார்.

கொரோனா பரிசோதனை நடத்தப்படாத காரண தால், ஊழியர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு காரணமாக ஒரு சிலருக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட் டுள்ளது. இவர்களில் 15 பேர் கொரோனாத் தொற்றா ளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## ஆயுர்வேத மருந்துகளில் தீவிரமான சோதனைகள்

கொழும்பு, டிசெ. 15

கொரோனாப் பெருந் தொற்றுக்கானவை என்று தெரிவிக்கப்படும் ஆயுர்வேத மருந்துகள் மட்டில் முறையான சோதனை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரச ஆயுர்வேத மருந்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரசாத் ஹெந்தாவிதாரன தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் தெரி வித்ததாவது:

தேசிய மற்றும் ஆயுர் வேத மருத்துவ முறை ளுக்கு அமைய சில மருந்துகள் தயாரிக்கப் பட்டுக்கொண்டிருக்கின் றன.

ஏதேனுமொரு தேசிய மருந்து அல்லது ஆயுர் வேத மருந்தை தயாரித் தால் அதனை ஆயுர் வேத திணைக்களத்தில் அல்லது ஆயுர்வேத மருந்துகள் தொடர்பில் ஆராய்வதற்கு சுகா தார அமைச்சால் நிய மிக்கப்பட்டுள்ள நிபுணர் கள் குழுவிடம் வழங்கு மாறு அறிவுறுத்து கின்றோம்.

இவ்வாறான தேசிய மருந்துகள் தொடர்பான கண்டுபிடிப்புக்கள் வர வேற்கத்தக்கவை. ஆனால் அவை ஒழுங்கு முறைகளின் அடிப்படை யில் மக்களை சென்ற டைய வேண்டும். அவ் வாறில்லை என்றால் மிகப் பெரும் சுகாதார நெருக்கடி ஏற்படும் - என்றார். (ம-இ)

# கொரோனாத் தொற்றின் மையமாக கொழும்பு!

கொழும்பு, டிசெ. 15

**இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்று பரவுவதற்குரிய மையமாகக் கொழும்பு உள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி ஹரித அலுத்கே தெரிவித்தார்.**



இலங்கையின் கொரோனா நிலவ ரம் தொடர்பில் தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் கொரோனாவை பரப்புவ தற்கான மையமாக அமெரிக்கா மாறியுள்ளது. அதுபோன்று இலங் கையில் கொரோனா பரப்பும் மைய மாக கொழும்பு மாறியிருக்கிறது. கொழும்பு மாநகர பகுதி, நாட்டில் வைரஸ் பரவுவதற்கான மையமாக மாறியுள்ளது. கொழும்புக்குள் வைரஸ் பரவுவதைக் கட்டுபடுத்த முடிந்தால், பிற மாவட்டங்களில் கொரோனா பரவுவதை கட்டுக்குள் வைத்திருக்க முடியும்' - என்றார். (ம-இ)

## கொங்கிறீட் புதைகுழிகளில் ஜனாஸாக்கள் நல்லடக்கம்!!

*சுகாதார அமைச்சு பரிசீலனை*

கொழும்பு, டிசெ. 15

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக இறக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கொங்கிறீட் புதை குழிகளில் அடக்கம்செய்ய பரிசீலனை செய்யப்படு கின்றது.

ஜனாஸாக்கள் இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு முர ணான வகையில் எரிக்கப்படுகின்றமைக்கு இலங்கை முழுவதும் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. சடலங் களை எரிக்காமல் அடக்கம் செய்ய வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். இந்த நிலையிலேயே கொங் கிறீட் புதைகுழிகளில் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-இ)



கொவிட் - 19 கட்டுப்படுத்தலுக்காக சர்வதேச லயன்ஸ் கழகம் 306 - B1 தலைமைச் செயலகத் தால், கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு தொகுதி பொருள்கள், உருத் திரபுரம் மருத்துவமனை மருத்துவ அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது. (க-222)

## வவுனியாவிலிருந்து பிரான்ஸ் சென்ற 2 இளைஞர்கள் மாயம்

வவுனியா,டிச.15

வவுனியாவில் இருந்து பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற இளைஞர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர் என்று வவுனியாவில் உள்ள அவர் களது குடும்பத்தினர் தெரிவித்த னர்.

வவுனியா கோதண்டர் நொச்சிக் குளம் மற்றும் குருமன்காடு பகுதி களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் முகவர் ஒருவருடாக இலங்கையில் இருந்து பயணித்துள்ளனர்.

இந்நிலையில் ஆபிரிக்காவின் பல் வேறு நாடுகளில் அவர்கள் தங்கி யிருந்த நிலையில் வவுனியாவில் உள்ள அவர்களது குடும்பத்தி னருடன் தொடர்பை ஏற்படுத்தி பேசியுள்ளனர்.

கோதண்டர் நொச்சிகுளத்தை சேர்ந்த மகேந்திரன் கவிஞன் (வயது - 23) என்ற இளைஞர் இறுதி யாக இம் மாதம் 3 ஆம் திகதி தனது குடும்பத்தினருடன் பேசியுள் ளார். அதன் பிறகு அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-110)


## முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்ய மாலைதீவு தயார்?

இலங்கையில் கொவிட் 19 தொற் றால் இறக்கும் முஸ்லிம்களின் உடலை அடக்கம் செய்ய மாலை தீவு அரசு முன்வந்துள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

முஸ்லிம்கள் உயிரிழந்தால் தக னம் செய்வது அவர்களின் மத நம்பிக்கைகளுக்கு எதிரானது என்று முஸ்லிம் சமூகத்தினர் குற் றம் சாட்டிவருகின்றனர். இந்த நிலையில் மாலைத்தீவு அரசு இலங்கை வெளியுறவு அமைச்ச கத்துக்கு அதிகார பூர்வ அறி விப்பு மூலம் தனது வாய்ப்பை வழங்கியுள்ளது.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட் டவர்களை அடக்கம் செய்வதற்கு ஒரு தீவை ஒதுக்க மாலைத்தீவு அரசு முன்மொழிந்துள்ளது, இதன் விளைவாக, சுகாதார அமைச்சு இதுபோன்ற ஒரு செயல் முறையில் நடைமுறை குறித்து ஆய்வு செய்யும். இதற் கான சாத்தியக்கூறு ஆய்வு முழு தைதத் தொடர்ந்து இந்த விவகா ரம் குறித்து முடிவு எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்தா ஹேரத் தெரி வித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் உள்ளது. (ப)

## வவு.பொது மருத்துவமனைக்கு புதிய பணிப்பாளர் நியமனம்



வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக மருத்துவர் த.காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார். வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் முன்னாள் பணிப்பாளர் இட மாற்றம் பெற்றுச் சென்ற நிலையில், மருத்துவர் த.காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத் துவமனையின் பணிப்பாளராகவும், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளராகவும் இவர் கடமையாற்றினார். (ஐ-18)

## நாவற்குழி தெற்கில் 65 பேர் தனிமையில்

நாவற்குழி தெற்கு பிரதே சத்தைச் சேர்ந்த 65 பேர் நேற்று சாவகச்சேரி சுகா தாரத் திணைக்களத்தால் தனி மைப்படுத்தப்பட்ட னர்.

இப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் மருதனார்மடம் சந்தையில் நின்ற வேளை யில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகத்தினர் நடத்திய எழு மாற்று பி.சி.ஆர். பரிசோ தனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

இதனையடுத்து அந்த நப ரின் உறவினர்கள் மற்றும் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்தியவர்கள் என 65 பேர் தனிமைப்படுத் தப்பட்டனர். (ஐ-9)

மழை வெள்ளத்தால்

# முல்லைத்தீவில் 2,287 ஹெக்டேயர் விவசாய நிலம் அழிவடைவு

முல்லைத்தீவு, டிசெ.15




முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் 2ஆயிரத்து 287 ஹெக்டேயர் விவசாய நிலம் அழிவடைந்துள்ளது என மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 ஆயிரத்து 848 ஹெக்டேயர் நிலப் பரப்பில் நெற்பயிர் செய்கை மேற் கொள்ளப்பட்டது.

அண்மையில் பெய்த மழை வெள் ளம் காரணமாக 2ஆயிரத்து 287 ஹெக்டேயர் விவசாய நிலம் அழி வடைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தாள் நில பிரதேசங்களில் இன்றும் வெள்ளம் வழிந்தோடிக் கொண்டி ருக்கின்றது

மாந்தை கிழக்கு துணுக்காய் பிர தேசத்தில் அதிகளவான அழிவுகள் பதிவாகியுள்ளன. அழிவு மதிப்பிடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இருந்தும் ஆயிரம் 500 ஏக்கர் விவ சாய நிலத்தை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது -என்றார். (ஜ-19)




கொரோனா ஆபத்தான இடங்கள்;

## வரைபடம் வெளியீடு

சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞா னப் பிரிவு இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றும் அதிகமான ஆபத்துள்ள பகுதிகள் தொடர்பான வரை படத்தை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவுகளின் மருத்துவ அதிகாரி களின் தரப்படுத்தல், அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தனி மைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை என்பன அடிப்படையில் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 7 ஆம் திகதி முதல் முடிவடைந்த 14 நாள்களை அடிப்படை யாகக் கொண்டு இந்த வரைபடம் வெளியிடப் பட்டுள்ளது. (பு)

## புகலிடக் கோரிக்கையாளர் மெல்பேர்னில் தற்கொலை

கொழும்பு, டிசெ. 15

இலங்கைப் பின்னணி கொண்ட தமிழ் புக லிடக்கோரிக்கையாளர் ஒருவர் ஆஸ்திரே லியாவின் மெல்பேர்னில் தவறான முடிவெ டுத்து உயிர் மாய்த்துள்ளார் என்று தமிழ் ஏதிலிகள் கழகம் தெரிவித்துள்ளது.

வருண்ராஜ் ஞானேஸ்வரன் என்ற 18 வய தான இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தமிழ் ஏதிலிகள் கழகத்தின் பேச்சா ளர் அரன் மயில்வாகனம் தெரிவித்துள் ளார். தனது தாய் மற்றும் தங்கையுடன் படகு மூலம் வந்து ஆஸ்திரேலியாவில் புக லிடம் கோரியிருந்தார் வருண்ராஜ். அவர் அண்மைக்காலமாக கடும் மன அழுத்தத் துக்கு உட்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ம-இ)

அலுவலகத்தில்

## குழுவாக உணவருந்தல் கொரோனாவை பரப்பும்!

கொழும்பு, டிசெ. 15



அலுவலகத்தில் ஒரு குழுவாக ஒன் றாக இருந்து சாப்பிடுவதும் புகைப் பதுவும் கொரோனா வைரஸ் பர வும் அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சா ளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பாலான மக்கள் அலுவலகம் அல்லது பணியி டத்துக்குச் செல்லும் வழியில் முகமூடி அணிந்தாலும், மதிய உணவை உட்கொள்ளும்போது அல்லது புகைப் பிடிக்கச் செல்லும்போது அதை அகற்றுகின்றனர் என முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக மக்கள் பெரிய குழுக்களாக சாப்பிடும்போது மதிய உணவைப் பகிர்ந்துகொள்ளும்போது அல்லது ஒரே குவளையிலிருந்து தண்ணீர் குடிக்கும்போது இது பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறது. இது போன்ற நிகழ்வுகளில் வைரஸ் பரவியிருப்பதை சுகாதார அதிகாரிகள் கண்டறிந் துள்ளனர் - என்றார். (ம-இ)

## தொற்று நீக்கச் சென்று பெண்களுடன் செல்பி

### உத்தியோகத்தர்களுக்கு தனிமை

கொழும்பு, டிசெ.15

கொரோனாத் தொற்றாளர் கள் 6 பேர் தங்கியிருந்தனர் எனக் கூறப்படும் வீட்டை தொற்று நீக்கம் செய்யச் சென்ற நகர சபை ஊழியர் கள் சிலர் அங்கிருந்த பெண் களுடன் இணைந்து செல்பி எடுத்துக் கொண்டதை அடுத்து அவர்கள் தனி மைப்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கம்பளை பிரதேசத்தில் இடம் பெற் றுள்ளது

தனியார் தொலைபேசி நிறு வனம் ஒன்றின் வியாபார மேம்பாட்டு குழுவைச் சேர்ந்த 40 பேர் கம்பளை கீரப்பனையில் தங்கியிருந்து பணிகளைச் செய்து வந்த நிலையில், அதில் ஆறு பேருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. தொற் றாளர்கள் தங்கியிருந்த வீட்டை கடந்த வெள்ளிக்கிழ மையன்று தொற்று நீக்கம் செய்வதற்கென நகர சபை உத்தியோகஸ்தர்கள் ஊழி யர்கள் சிலருடன் சென்றுள் ளனர் இதன்போது உத்தியோ கஸ்தர்கள் சிலர் சுகாதார விதி முறைகளை மீறி தொற்று நீக்கம் செய்யச் சென்ற வீட் டில் இருந்த பெண்களுடன் இணைந்து செல்பி எடுத்துக் கொண்டனர். இதையடுத்து நகர சபை உத்தியோகஸ்தர் களை பொதுச் சுகாதார அதிகாரிகள் அவர்களது வீட்டில் தனிமைப்படுத்தியுள் ளனர். (பு)



சாவகச்சேரி பனை- தென்னை வள அபிவி ருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர், புயல் மற்றும் பெருமழையால் தொழில் பாதிக்கப்பட்ட அங்கத்த வர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வெள்ள நிவா ரணமாக தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறும தியான உலர் உணவுப் பொருள்களை வழங்கி னர். (க-9)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, குட்நியூஸ் தொண்டு அமைப்பின் ஊடாக, உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-56)



ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக, மன்னார் மாவட்டத்தில் மூன்றாம் பிட்டி பகுதியைச் சேர்ந்த நூறு குடும்பத்தினருக்கு உலர் உணவு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனு சரணையை பிரான்ஸ் மக்களுக்கு உதவும் மக் கள் மன்றம் மற்றும் குளோரியஸ் மிஷினரி சேர்ச் இணைந்து வழங்கின. (க-222)



யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி யால், புரேவிப் புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. (க-63)




உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினூடாக புலம் பெயர் வாழ் உறவுகளால், கிளிநொச்சி உருத்திர புரம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு பயிற்சி புத்தகங்கள் மற்றும் காலணிகள் வழங்கப்பட் டன. (க-222)

# சனிப்பெயர்ச்சி பலன்கள்!

ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.



நேற்றைய தினம் மகர ராசிக்கான பலன்களே வெளியாகின. தவறுதலாக தனுசு என பெயரிடப்பட்டு விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

## கும்பம்

இயல்பை எப்போதும் மாற்றிக்கொள்ளாத கும்ப ராசி அன்பர்களே!

பகவான் இப்போது 27.12.2020 முதல் 19.12.2023 வரை, விரயச் சனியாக அதாவது ஏழரைச் சனியின் தொடக்கமாக வருகிறார். ஏழரைச்சனியாக இருந்தாலும் நல்ல பலன்களையே தருவார். உங்கள் ராசிநாதன் சனி பகவான் ஆட்சி பெற்று அமர்வதால், தடைப்பட்டுக் கொண்டிருந்த பல காரியங்களை இனி விரைந்து முடிப்பீர்கள்.

இதுவரை உங்கள் ராசிமீது வீழ்ந்த சனியின் பார்வை இனி விலகுவதால், கம்பீரமாகப் பேசி மாறுபட்ட அணுகுமுறையால் தீர்க்க முடியாத பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பீர்கள். சுபச் செலவுகள் அதிகரிக்கும். மகான்கள், சித்தர்களின் ஆசி கிட்டும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள்.

மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்களை, இரவல் வாங்குவதோ, கொடுப்பதோ வேண்டாம். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகளை எடுக்கா தீர்கள். முக்கிய ஆவணங்களில் கையொப்பம் இடுமுன் வழக்கறிஞருடன் ஆலோசிப்பது நல்லது. 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் உங்கள் ராசிக்கு ஜன்மச் சனியாக அமர்வதால் வீண் விரயம், விரக்தி, ஏமாற்றம், காரியத் தடை வந்து நீங்கும்.

சனிபகவான் உங்களின் 2ம் வீட்டைப் பார்ப்பதால், பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். செலவுகளும் துரத்தும். கொடுத்த வாக்கைக் காப்பற்ற போராட வேண்டி இருக்கும். சனி உங்களின் 6ஆம் வீட்டைப் பார்ப்பதால் வழக்கு சாதகமாகும். நோய் விலகும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய வழிவகை பிறக்கும். சகோதரிக்குத் திருமணம் முடியும். 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் தந்தைக்கு நெஞ்சு வலி, கைகால் அசதி வந்து நீங்கும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். செல்வாக்கு உயரும்.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் சப்தமாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால், குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். மாமியார், நாத்தனாரின் ஆதரவு பெருகும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். கணவர் வழி உறவினருடன் இருந்த மனக்கசப்பு நீங்கும்.

இதற்கிடையில் 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனிபகவான் வக்ரத்தில் செல்வதால், தந்தையுடன் கருத்து மோதல்கள் வரும். அவரின் உடல்நலனில் கவனம் தேவை.

உங்களின் சஷ்டமாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத் திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால் அடிவயிற்றில்வலி, அலர்ஜி, சளித் தொந்தரவு மற்றும் கடன் பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டி வரும். 25.05.2022 முதல் 09.10.2022 வரை வக்ரத்தில் செல்வதால் பூர்வீகச் சொத்து வழக்கில் வெற்றி, திடீர் பணவரவு உண்டு.

உங்களின் திருதியஜீவனாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனிபகவான் செல்வதால் தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். 27.06.2023 முதல் 23.10.2023 வரை, சனி பகவான் வக்ரம் அடைவதால் அலைச்சல் அதிகரிக்கும். உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பாதியில் நின்ற வீடு கட்டும் பணி முழுமையடையும்.

இல்லத்தரசிகளே, அடகில் வைத்த நகைகளை மீட்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டு. அலுவலகம் செல்லும் பெண்களுக்கு ஆரோக்கியம் கூடும். புதிய பொறுப்புகள் தேடி வரும்.

வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்யுங்கள். போட்டிகளையும் மீறி ஓரளவு சம்பாதிப்பீர்கள்.

புது சலுகைத் திட்டங்களை அறிவித்து வாடிக்கையாளர்களைக் கவர்வீர்கள். மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மருந்து, கமிஷன், மர வகைகளால் ஆதாயம் உண்டு. பங்குதாரர்களுடன் அவ்வப்போது மோதல்கள் வரும்.

உத்தியோகஸ்தர்களே, சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். இரண்டாம் கட்ட உயரதிகாரிகளால் அவ்வப்போது ஒதுக்கப்பட்டாலும் மூத்த அதிகாரிகளால் முன்னுக்கு வருவீர்கள். வேலைச்சுமை அதிகமாகத்தான் இருக்கும். வேறு சில நல்ல வாய்ப்புகளும் உங்கள் இருக்கையைத் தேடி வரும். சக ஊழியர்களுடன் சலசலப்பு உண்டு. உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்கில் வெற்றி உண்டு. கணினித் துறையினருக்கு பதவி சம்பள உயர்வுகள் தடைப்பட்டாலும், அவற்றைப் போராடி பெறுவீர்கள்.

**பரிகாரம்: அனுமன் வழிபாடும் விநாயகர் வழிபாடும் சிறந்த பலன்களைத் தரும். ஆதரவற்ற முதியோர்க ளுக்கு உதவுங்கள்; தடங்கல்கள் நீங்கும்; வீட்டில் மங்கலச் சூழல் நிறையும்.**

---

## இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ.15

39 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி செயலா ளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவை, தொற்றுநோயியல் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி குமார சிறியும் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜி.சி.கருணாரத்ன வும், மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளராக கே.ஆர்.உடுவாவலவும் நியமிக்கப் பட்டுள்ளனர். (ந-இ)

---

## நாட்டின் சுதேச மருந்துகளை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்துக

### பிரதமர் மஹிந்த வலியுறுத்து

கொழும்பு, டிசெ.15

கொரோனாத் தடுப்புக்காக தேசிய மட்டத்தில் கண்டுபிடிக் கப்பட்டுள்ள சுதேச மருந்து மற்றும் சிகிச்சை முறைகளை விஞ்ஞான ரீதியில் உறுதிபடுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, கொரோனாத் தடுப்புக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் மருத்துவம், கலாநிதி ஹர்ஷ சுபசிங்க மற்றும் இந்திக ஜாகொட ஆகியோரால் தயாரிக்கப்பட்ட உள்ளூர் சிகிச்சை முறை மற்றும் கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத மருத்துவரின் ஔடத பாணி என்பவற்றை விஞ்ஞான முறையில் உறுதிப்படுத்த அறிவுறுத் தப்பட்டுள்ளது.

மேலும் உலகில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசி வகைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப் பிக்குமாறு பிரதமர் அறிவுறுத்தியிருந்தார்.

அது தொடர்பான சீ.டீ.ஏ. அறிக்கையை தேசிய ஆராய்ச்சி சபை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கையளித்துள்ளது. (வ-இ)

---

## கொரோனாவை எதிர்க்க நீராவி

ஹற்றன், டிசெ.15

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க பெருந்தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் நீராவி பிடிக்கும் முறைக்கு ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக டயகம கிழக்கு பகுதியில் உள்ள மூன்று தோட்டங்களுக்கு நீராவி பிடிக்கும் கருவிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என தோட்ட முகாமையாளர் முதித்த திவாகர தெரிவித்தார். (வ-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** நேற்றைய தொல்லைகள் எல்லாம் மறைவதால் நிம்மதி அடைவீர்கள். இன்று பேச்சிலும், செயலிலும் மிகுந்த கவனமாக இருப்பது நல்லது. வம்பில் மாட்டும்படியான செயல்கள் எதுவும் செய்ய வேண்டாம்.

**இடபம்:** சகஊழியர்களின் ஒத்துழைப்பால் நிம்மதி கிடைக்கும் நாள். உங்களின் சமூக அந்தஸ்து உயரும். உறவினர்கள் தொடர்பு கொள்வர். கோபம் இன்று குறையும்.

**மிதுனம்:** குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். அலுவலகப் பணிச்சுமை குறையும். உடன்பிறந்தோர் உதவிக்கரம் நீட்டுவர். மனக்கவலை நீங்கும். அறிகுறிகள் தென்படும்.

**கடகம்:** எதையாவது நினைத்து மனதை வீணாக குழப்பிக் கொள்ள வேண்டாம். பெண்களின் பயம் நீங்கும். சொந்த முயற்சியால் பணவரவு உண்டு. நண்பர்களால் ஆதாயம் அடைவீர்கள்.

**சிம்மம்:** அலுவலக வேலைகளில் கவனமாக இருப்பது மிகவும் அவசியம். வழக்குகள் இருந்தால், சாதகமாக முடியும். தந்தை நலமடைவார். மனதுக்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம்.

**கன்னி:** வீட்டைப் புதுப்பித்துக் கட்டுவீர்கள். மன நிம்மதி அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பர். பணியில் புதிய யுக்திகளை கையாண்டு வெற்றி பெறுவீர்கள்.

**துலாம்:** தொழிலில் பங்குதாரர்கள் எதிர்பார்த்தபடி உதவிகரமாக இருப்பார்கள். யாரையும் அதிகமாக நம்பாதீர்கள். பொழுதுபோக்கு அதிகரிக்கும். மனவருத்தம் நீங்கி மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** வியாபாரிகள் வரவேண்டிய பாக்கியை கறாராகப் பேசி வசூல் செய்வீர்கள். பெண்களின் கடந்த கால மனக் குறைகள் மெல்ல நீங்க ஆரம்பிக்கும். நலம் விளையும்.

**தனுசு:** மனம் நிறைவடையும். புகழ்மிக்கவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். புதிய நட்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தராமல் இருப்பது நல்லது.

**மகரம்:** பணியாளர்களுக்கு தொலைபேசி மூலம் கேட்கும் செய்தி மகிழ்ச்சி தரும். நீங்கள் மிக மதிக்கும் ஒருவருடைய ஆசியை பெறுவீர்கள்..தம்பதிகளிடையே அந்நியோன்யம் உண்டு.

**கும்பம்:** பிள்ளைகளிடம் இருந்து மனம் மகிழும்படியான செய்தி ஒன்று வரும் குடும்ப ஒற்றுமைக்காக எடுக்கும் முயற்சிகள் நல்ல பலன் தரும்.

**மீனம்:** மருத்துவமனையில் இருந்த உறவினர் நன்கு குணமாவார். குழந்தைகள் தம் பொறுப்பு அறிந்து நடந்து கொள்வார்கள்.வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

# பி.சி.ஆர். அதிகரிப்பு




கொழும்பு, டிசெ.15

நாட்டில் நேற்று முன்தினம் அதிகூடிய பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால் இவ்வாறு பி.சி.ஆர்.பரிசோதனைகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதன்படி, 15 ஆயிரத்து 239 பேருக்கு நேற்றைய தினம், பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அந்நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)

## ரூ. 360 மில்லியன் செலவில் புதிய பி.சி.ஆர். உபகரணங்கள்

கொழும்பு, டிசெ.15

இலங்கைக்கு எதிர்வரும் 2 மாதங்களுக்குள் பி.சி.ஆர் பரிசோதனைகளைத் துரிதப்படுத்தும் 10 புதிய உபகரணங்கள் கொண்டு வரப்படவுள்ளன என்று ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் பணிப்பாளர், மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் திட்ட சேவைகள் தொடர்பான அலுவலகத்திடம் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் புதிய உபகரணங்கள் மூலம் மூன்றரை மணித்தியாலங்களில் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளை பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக 360 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் 2 லட்சத்து 50 ஆயிரம் பி.சி.ஆர் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 800 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## லொக்காவின் உதவியாளர் அதிரடிப்படையினரால் கைது

கொழும்பு, டிசெ.15

பாதாள உலகக்குழுத் தலைவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் (வயது-38) பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கொட பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ள இச் சந்தேகநபரிடமிருந்து. 2 துப்பாக்கிகள் மற்றும் ரி-56 ரக 18 ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைதான நபருக்கு அங்கொட லொக்காவுடன் தொடர்பு உள்ளதா என்பது தொடர்பில் முல்லேரியா பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இரண்டு வாள்கள், துப்பாக்கி மற்றும் கைக்குண்டு ஆகியவற்றுடன் ஒருவர் அவிசாவளையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட் டுள்ளார். (ந-இ)

## கண்டியில் மீண்டும் இயங்கும் 42 பாடசாலைகள்!!

கண்டி, டிசெ.15

கண்டியில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 45 பாடசாலைகள் கடந்த 26 ஆம் திகதி மூடப்பட்ட நிலையில், நேற்று முதல் 42 பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

45 பாடசாலைகளில் டிரினிட்டி கல்லூரி, தக் ஷிலா கல்லூரி மற்றும் கலைமகள் கல்லூரி என்பன மறு அறிவித்தல் வரை மூடப்பட்ட நிலையிலேயே இருக்கும்.

ஏனைய 42 பாடசாலைகளும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே மற்றும் சுகாதார அதிகாரிகளின் அறிவுத்தல்களுக்கு அமைவாக நேற்று மீண்டும் திறக்கப்பட்டன. (ந-இ)

## ஐ.தே.க பொதுச் செயலராக பாலித ரங்கே பரிந்துரைப்பு

கொழும்பு, டிசெ.15

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு அக்கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அண்மையில் விலகியிருந்தார்.

இதையடுத்து பதில் பொதுச்செயலாளராக சமல் செனரத் நியமிக்கப்பட்டார். இந்நிலையில் முன்னாள் எம்.பி ரங்கே பண்டாரவின் பெயரும் அப்பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ-இ)



# அரசுடன் பேச தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை அவசியம்

### சுரேன் ராகவன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.15

அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை மிகவும் அவசியமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றின் நேரடி அரசியல் விவாத நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பெரும்பான்மை பௌத்தர் களின் அமோக ஆதரவைப் பெற்று, ஆழமான சிங்கள தேசியத்துவத்துடன் தற்போது ஆட்சியமைத்துள்ள அரசுடன் பேசுவதற்கு தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையும் முக்கிய மானதாகக் காணப்படுகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியிலுள்ள, தேசியவாத தென்னிலங்கை அரசுடன், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு, புதியதொரு அணுகுமுறையையும் அரசியல் மொழியையும் உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் புத்திஜீவிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இருக்கின்றன- என்றார். (ந-இ)

# HUTCH

## உயர்வை நோக்கி

WORLD MARKETING CONGRESS

## SRI LANKA BRAND LEADERSHIP AWARDS 2020







ஆண்டின் வளர்ந்து வரும் வர்த்தக நாமம்

ஆண்டின் சிறந்த சந்தைப்படுத்தல் பிரச்சாரத் திட்டம்

Hutch உலக பிரசித்தி பெற்ற இரண்டு சந்தைப்படுத்தல் விருதுகளை வென்ற பெருமைக்குரிய உரிமையாளர் ஆகும்.

இவ் வெற்றிக்கான பாதையில் படைப்பாக்கப் பங்காளராக எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய Wunderman Thompson Sri Lanka நிறுவனத்திற்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# HUTCH

மிகப்பிரம்மாண்டமாக உங்கள் அருகில்

**முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....**

## வடக்கு...

தார். அதேவேளை, 22ஆம் திகதி வங்காள விரிகுடாவில் மற்றொரு தாழமுக்கம் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

## யாழ்ப்பாணம்....

ளார். வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின் மாகாண ஆளுநரின் அனுமதியுடன் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மருதனார்மடம் கொரோனாத் தொற்றுப் பரவல் கொத்தணியின் பின்னர் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட உடுவில் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை மூடப்பட்டன.

இந்த நிலையில் வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கு உள்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று மாகாண கல்வி அமைச்சின் செயலர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட 104 பாடசாலைகளும் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட 147 பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன, என்றார். (ஒ.5)

## வவுனியா....

கொரோனாத் தொற்றுப் பரவாதிருப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைத் தகவல்கள் கூறுகின்றன.

திருகோணமலையைச் சேர்ந்த கைதி ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவருக்கு கடந்த 12ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்றும், அதன் முடிவுகள் நேற்று முன்தினம் கிடைத்தன என்றும் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

அவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

அதேவேளை, மஹர மற்றும் வெலிகடைச் சிறைச்சாலைகளில் ஏற்பட்ட கொரோனா பரவலால் நூற்றுக்கணக்கான கைதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ-110)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி - 2020
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

01. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோருப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சி னால் வெளியிடப்பட்ட 03/2020ஆம் இலக்க 09.10.2020ஆந் திகதிய, 04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 15.12.2020 தொடக்கம் **28.12.2020**ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **15.12.2020** திகதியிலிருந்து **28.12.2020**ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**3000/- (வரி நீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **30.12.2020**ம் திகதி **மு.ப 9.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
09. கோரப்பட்ட வேலைகளின் கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **63(அறுபத்துமூன்று – 03.03.2021)** நாட்களாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | பொதுநோக்கு மண்டபம் அமைத்தல் - சங்குவேலி NP/14/41(15)/02/05/PC/2020/54 | 2.771 | 90 நாட்கள் | C8 /C7 (கட்டடங்கள்) | 28,000.00 | 31.03.2021 |

11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் **22.12.2020**ம் திகதியன்று **மு.ப 10.00** மணிக்கு நடைபெறும்.

**க.தர்சன்,**
தவிசாளர்
பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
15.12.2020.


# மரண அறிவித்தல்

## திருமதி ஞானாம்பிகை சண்முகநாதன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்)**

**பிறப்பு: 24.11.1938** **இறப்பு: 13.12.2020**



நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை சண்முகநாதன் அவர்கள் 13.12.2020ல் லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லக்குட்டி பாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கம்மா தம்பதியரின் மருமகளும், சண்முகநாதன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கலாவல்லி, ஜெகதீஸ்வரி, யமுனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தன், காலஞ்சென்ற ரமேஷ், சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரணவன், அபிராம், விசாலி, அனுஷன், விதுஷன், சிவகாமி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற மோகனாம்பிகை (ஓய்வுபெற்ற இசையாசிரியை-யா/ சாவகச்சேரி இந்து கல்லூரி), முருகதாஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசன், கமலாம்பிகை, மகேஸ்வரன், யோகநாதன், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**திருமதி சி.சுபத்திராதேவி (கல்வயல்) 077 6382 608**
**திருமதி த. துர்க்காதேவி (கல்வயல்) 077 725 2092**
**திருமதி ம.மதுராதேவி (முல்லைத்தீவு) 077 161 2883**
**திரு. செ.முருகதாஸ் (கொழும்பு) 076 749 3922**

# மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 07 | | 13 |
| 10 | | 12 |
| 1978 | | 2020 |



## பாலச்சந்திரலால் பிரதீபன்

திருநெல்வேலி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் இந்தியாவினை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரலால் பிரதீபன் (தீபன்) அவர்கள் 13.12.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரலால் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காண்டீபன், ஆரபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரகுராஜ், தர்ஷனா ஆகியோரின் அன்பு மைத்துனனும், அஸ்விதா, கிரிஷ் ஆகியோரின் அன்பு மாமனும், ஆதர்ஸ், ஆதிரா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.12.2020) திங்கட்கிழமை இந்தியாவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**ச.ரவிச்சந்திரலால் (சித்தப்பா)**
**077 774 1205**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 13 . 01 . 1954


இறப்பு 13 . 12 . 2020

**அமரர் A.J.கதிர்காமர்**

எமது நிறுவனத்தின் ஆளுனர் சபை உறுப்பினரும், முன்னாள் தலைவருமாகிய அமரர் A.J.கதிர்காமர் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

JAFFNA

**வை.எம்.சி.ஏ சமூகம்**
**யாழ்ப்பாணம்**



## ஷாம்பவி பதிப்பகம்

2021 ஆம் ஆண்டுக்கான கலண்டர் வகைகள் (A3, A2) விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**ஷாம்பவி பதிப்பகம்**
**265, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**076 0333 502**

# யூரியா ஏற்றிச் சென்ற வாகனம் குடைசாய்ந்தது

வவுனியா, டிசெ. 15

வவுனியா ஓமந்தை விளக்கு வைத்தகுளம் பகுதியில் யூரியா ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதன் சாரதி தப்பி ஓடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புநோக்கி யூரியா ஏற்றிச் சென்ற வாகனம் ஓமந்தையில் சென்றுகொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச்சென்ற ஓமந்தை பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (த-110)

## நல்லூர் பிரதேச சபை
## 2021 ஆம் ஆண்டிற்கான சட்ட ஆலோசனை சேவை வழங்குனர்களுக்கான கூறுவிலை கோரல்

சபையானது 2021 ஆம் ஆண்டிற்கான சட்ட ஆலோசனைச் சேவையினை தகுதியான ஆர்வமுடைய சட்ட ஆலோசகர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை மீளளிக்க முடியாத ரூபாய் 1000.00 இனைக் கட்டணமாகச் செலுத்தி அலுவலக நேரத்தில் நிதிக் கிளையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

விண்ணப்பப் படிவங்களை கடித உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் **சட்ட ஆலோசனை வழங்குனர் சேவை 2021** எனக் குறிப்பிட்டு 2020.12.28 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் தபால் மூலமாகவோ நேரடியாகவோ தலைவர், பெறுகைக்குழு, தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் எனக் குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0212222700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2020.12.14

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்

**திரு.A.K.சபாபதிபிள்ளை**

அவர்கள் நேற்று (14.12.2020) திங்கட்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**வட்டமேசை**
**யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

## துயர் பகிர்கின்றோம்



யா/ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலையின் ஆசிரியை திருமதி கலைச்செல்வி விக்கினேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி கணேசன் கமலாம்பிகை**
**(முன்னாள் நெசவு ஆசிரியை)**

அவர்கள் 09.12.2020 அன்று கனடாவில் காலமாகிவிட்டார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலை**

## கேள்வி அறிவித்தல்
### வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி
### வீதி வேலைக்கான கற்கள் விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல்

1. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட நைனாமடு கரப்புக்குத்தி வீதியில் உள்ள சபைக்கு சொந்தமான வீதி வேலைக்கான கற்களை விற்பனை செய்வதற்காகக் கோருகின்றார்.

| கேள்வி எண் | வேலை விபரம் | கணிய அளவு (Quantity) | ஒப்பந்த தொகை (Mn) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1.COUNCIL/MATERIALS/VNPS/2020/01 | 2"Metal மூலப் பொருட்களை விற்பனை செய்தல். | 613.42m3 | 1.47 Mn | கேள்வித் தொகையின் 10% | 2021.03.10 |
| 2.COUNCIL/MATERIALS/VNPS/2020/02 | 4" Metal மூலப் பொருட்களை விற்பனை செய்தல். | 1014m3 | 1.54 Mn | கேள்வித் தொகையின் 10% | |


2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான கோரிக்கையுடன் ஒரு மூலப்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 1000/= இனையும் இரு மூலப்பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 2000/= இனையும் மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 15.12.2020ம் திகதி தொடக்கம் 30.12.2020ம் திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி வரையான காலப்பகுதியில் **தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங் கேணி** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விதாரர்கள் இவ் மூலப்பொருட்களை ,அலுவலக நாட்களில் 15.12.2020ம் திகதி தொடக்கம் 30.12.2020ம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் மு.ப 10.30 மணி வரை வீதி வேலைக்ான மூலப்பொருட்களை நைனாமடு கரப்புக்குத்தி வீதியில் பார்வையிடலாம்.
4. ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட மூலப்பொருட்களுக்கான விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு மூலப்பொருட்களிற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. கேள்விதாரர்கள் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு பணத்தினை அட்டவணையிலுள்ள மூலப்பொருட்களிற்கான கேள்விதாரரினது கேள்வித் தொகையில் 10% கேள்விப் பிணைப் பணத்தினை ( Bid Security) வைப்பாக தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி எனும் முகவரியில் பணமாக செலுத்துதல் வேண்டும். கேள்வி பிணை முறியினது காலாவதி திகதி 10.03.2021 ஆகும்.
6. கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்விப் பத்திர மூலம் வீதி வேலைக்கான கற்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம்- ஒப்பந்த இல ........" எனக் குறிப்பிட்டு 30.12.2020ம் திகதி மு.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி" என்னும் முகவரிக்கு பதிவுத் தபா லிலோ அல்லது வவுனியா வடக்கு பிரதேச சபையிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
7. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

தலைவர்,
பெறுகைக் குழு, வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.
2020.12.14

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
## மாதகல்
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 11
ஆதன இல :- 16
வீதி :- வெள்ளவாய்க்கால் ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு :- J/155

எமது இடாப்பில் வட்டாரம் 11, வெள்ளவாய்க்கால் ஒழுங்கை , ஆதன இல.16 இல் கார்த்திகேசு கதிரவேலு எனும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி தற்போது வலிகாமம் தென்மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை "கொல்லன் புலம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 2, குழி 12.87 கொண்ட சித்திரமேழி, இளவாலையைச் சேர்ந்த கார்த்தி கதிரவேலு என்பவரால் மகனாகிய கதிரவேலு பாலசுப்பிரமணியம் என்பவருக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 5668ம் இலக்க 11.05.2016ம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப் படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய் துள்ளனர். நில அளவையாளர் திரு. A. லோகநாதன் அவர்களால் வரையப்பட்ட 250ம் இலக்க 2016.01.20ம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "கொல்லன் புலம்" நிலப்பரப்பு 2 குளி 12.87 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது கதிரவேலு பாலசுப்பிரமணியம் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.




திரு. அ. ஜெபநேசன்
தவிசாளர்
வலி.தென்மேற்கு
பிரதேச சபை.
மானிப்பாய்.

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## 2021ம் ஆண்டிற்கான பகிரங்க ஏல கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 01.01.2021ம் திகதி தொடக்கம் 31.12.2021ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலக் கேள்விகள் கோரப்பட்டுள்ளன. ஏலத்திற்கான விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏலத்திற்கான விண்ணப்பப் படிவங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.

ஏல விண்ணப்பப்படிவம் வழங்கும் இறுதித்திகதி : 22.12.2020ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 - பி.ப 2.00

பகிரங்க ஏலக்கேள்வி நடைபெறும் திகதி : 22.12.2020ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00

பகிரங்க ஏலக்கேள்வி நடைபெறும் இடம் : தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

| இல | இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 111,012.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 132,012.00 |
| 3 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 121,581.00 |
| 4 | கோண்டாவில்ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 121,581.00 |
| 5 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1,603,210.50 |

மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு தா.தியாகமூர்த்தி
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை
15.12.2020

# Invitation for Bids

## Nallur Pradeshiya Sabha, Kokkuvil.

The Chairman Procurement Committee of Nallur Pradeshiya Sabha, Kokkuvil invites sealed bids from eligible and qualified bidders for following Works

| SN | Bid No | Name of Item/ Work | Bid Security & Validity Period | Non Refundable Fees |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41/10/ Acc/Proc/IP Based CCTV Surveillance System -2020 | Supply, Delivery, Installation, Testing and commissioning of IP Based CCTV Surveillance System -2020 | 25,000.00<br>27.04.2021 | 1,000.00 |

1. Bidding will be conducted through National Competitive Bidding.
2. Interested eligible Suppliers may obtain applications from 15th December 2020 to 28th December 2020 between 9.30am and 2.30 p.m on working days from the Accounts Branch of Nallur Pradeshiya Sabha, Kokkuvil and payment of non – refundable fee should be made as given on the above (For further information Contact Telephone No – 021-222-2700, Fax No – 021-222-0138)
3. Suppliers may submit their quotations by hand or registered post. The envelop shall bear the identification number on the left top corner (NP/14/41…..). The quotations to be addressed to Chairman, Pradeshiya Sabha of Nallur, 14/5, Karuvappulam Road, Kokuvil to reach before 10.00am on 30th December 2020 and will be opened immediately after closing of bids. Suppliers or their authorized representatives may be present. Late bids will be rejected.
4. All bids must be accompanied by a bid security and the validity period of Bid security is given in table above.
5. A Pre bid meeting will be held at, Pradeshiya Sabha of Nallur on 22nd December 2020at 10.00am. Interested bidders may participate in this meeting at their own expense.

**Chairman,** **15.12.2020**
**Procurement Committee,**
**PradeshiyaSabha, Nallur.**

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
# வலிகாமம் வடக்கு பிரதேசசபை
# உப அலுவலகம் - மல்லாகம்

விண்ணப்பதாரர் - சாணையன் இரவிச்சந்திரன் (672061377V)
முகவரி - கட்டுவன் வீதி, மல்லாகம்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 12 வல்லை றோட்டில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான சப்பட்டியான் நிலப்பரப்பு 04 குழி 05.93 கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் பதிவில் இல்லை.

குறித்த ஆதனமானது 2016 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.காயத்திரி அகிலன் முகதாவில் 345 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி சுந்தரமூர்த்தி கைம்பெண் சின்னம்மா, நாகமுத்து சிவஞானம் ஆகியோர் சாணையன் இரவிச்சந்திரனுக்கும் மனைவி சியாமளாவிற்கும் அறுதியளித்துள்ளனர். குறித்த உறுதியின் தாய் உறுதி 1926ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 04ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் சு.சுப்பிரமணியம் முகதாவில் 13 ஆம் இலக்கத்தில் முடிந்த சீதன உறுதிப்படி இளையவன் பெண் சடைச்சி என்பவருக்கு இருந்ததென்றும் அவர்கள் இறக்க அவரின் தாய்வழியாக சுந்தரமூர்த்தி கைம்பெண் சின்னம்மா, நாகமுத்து சிவஞானம் ஆகியவர்களுக்கு வந்ததென்றும் 345/14.09.2016 ஆம் இலக்க உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதன விபரம்.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான "சப்பட்டியான்" நிலப்பரப்பு 04 குழி 05.93 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T. தங்கராஜா அவர்கள் வரைந்த 7030/29.01.2015 இலக்க வரைபடத்தின்படி துண்டு -01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - இதன் மிகுதி ஆதனம்

வடக்கு - அமுதலிங்கம் பரஞ்சோதியினதும் செல்லத்துரை அன்னம்மாவினதும் நேசன் மனைவி தயாளியினதும் ஆதனம்

மேற்கு - தம்பிஐயா தங்கரின் ஆதனம்

தெற்கு - விஜயராஜா கமலாவினதும், மதியழகன் பாலரஞ்சினியினதும் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சுந்தரமூர்த்தி கைம்பெண் சின்னம்மா, நாகமுத்து சிவஞானம் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

# யாழ்ப்பாணம் மாநகர சபை
# 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் கௌரவ திரு. இம்மானுவல் ஆனல்ட் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந் துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2020 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு /மதிப்பீட்டை 2021 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/ மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1)ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனங்களின் **நிலங்கள், வதிவிடங்கள் என்பவற்றுக்கு வருடாந்த பெறுமதியில் 8% சதவீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த பெறுமதியில் 10% சதவீத**மாகவும் விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2021 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப் பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் - குறித்த வீத -வரித்தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

கௌரவ இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர்
மாநகரசபை

யாழ்ப்பாணம் மாநகர சபை

மேற்படி அட்டவணை

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2021 - 31.03.2021 | 31.01.2021 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2021 - 30.06.2021 | 30.04.2021 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2021 - 30.09.2021 | 31.07.2021 |
| நான்காவது காலாண்டு | 01.10.2021 - 31.12.2021 | 31.10.2021 |

## மரண அறிவித்தல்



பிறப்பு
1941 . 09 . 16

இறப்பு
2020 . 12 . 14

# வைத்திலிங்கம் வில்வரத்தினம்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வில்வரத்தினம் 14.12.2020 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குணசோதி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், மஞ்சுளா(சுவிஸ்), கோமளா(சுவிஸ்), முரளி(கனடா), கோசலா, கேமலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அன்னலெட்சுமி அவர்களின் சகோதரனும், சிவநேசன்(சுவிஸ்), சிவகுமார்(சுவிஸ்), பிரதீபா(கனடா), கணேஸ், சதுர்மன் ஆகியோரின் அன்பு மாமனும், கார்த்திகன், சமந்தா, சாதுசன், சனுஜன், சினேகன், திலக்சன், அலக்சன், கோபிதன், டசானி, சமா, சப்றி, கபிலன், நித்தியா, டயனா, விஸ்வநாதன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ம் ஒழுங்கை,
மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
13 . 01 . 1954

மறைவு
13 . 12 . 2020

# அல்பேட் ஜெபரட்ணம் கதிர்காமர்

(ஓய்வு நிலை கொமர்சல் வங்கி அதிகாரி)

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் ஜெபரட்ணம் கதிர்காமர் (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் கதிர்காமர் - திலகா கதிர்காமர் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் வசந்திராவின் (ஓய்வு நிலை கொமர்சல் வங்கி அதிகாரி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் சடாட்சரன் , குணபூசணி சடாட்சரன் ஆகியோரின் அன்பு மருமகனும் றொபேட் கதிர்காமர், சாந்தி தம்பிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற லயனல் தம்பிராஜா மற்றும் சந்திரிகா சுரேந்திரன் காலஞ்சென்ற சிவசந்திர மௌலி மற்றும் தபோதினி பஞ்சநாதன், சஞ்ஜயன், துளசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நல்லடக்க ஆராதனையை தொடர்ந்து நவாலி ஆரியம்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"லக்சுமி வாசா"
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி

**077 6658 202**

# 31 ஆம் நாள் நினைவில்...

வாழ்வு தந்த தெய்வம்


## அமரர் குலசிங்கம் சாந்தரூபன்

(வவா)

(நியூரூபன் ரெக்ஸ்ரைல்ஸ் முதலாளி (உரும்பிராய்)

தோற்றம்
20.11.1967

மறைவு
15.11.2020



பாலை வனம் ஒன்றில் பரிதவிக்கவிட்டு பறந்து போனது
எங்கள் பாசம் பாதிவழியில் பயணிக்க முடியாது தவிக்கின்றோம்
நீங்கள் தான் எங்கள் சுவாசம் சோலையாக்கி எம் வாழ்வை
காலை மாலை என்று களைப்போடு உழைத்தீர்கள்
வேலை ஒன்றே வேறு சிந்தனையின்றி எங்களை
வளர்த்தா களைத்தீர்கள் நாளை நமக்கு சூனியமே
ஒரு வேளை உங்கள் குரல் கேட்காது தேடுகிறோம்
நமக்கும் ஒரு நம்பிக்கை தந்த தெய்வம் அப்பா
நாமிழந்து வாடுகின்றோம்.
எல்லாமாய் இருந்து எல்லாமே செய்து எமக்களி
அன்பு தந்த அன்புருவே!
எமை விட்டு சொல்லாமல் போக எப்படித் தான்
மனம் வைத்தீரோ! பொல்லாத நோய் ஒன்று போதும்
உம் வாழ்வென்று போட்டிக்கு வந்ததேனோ?
பொத்தி வைத்த அன்பை எல்லாம் விட்டு விட்டு
போய்ச் சேர்ந்த மாயமென்ன?
இல்லை என்று நம்ப இதயம் என்ன கல்லா இந்த
வாழ்க்கை நீர் போட்ட பிச்சை
இல்லை இன்னும் உங்கள் வரவுக்கே வாசலில்
இருக்கின்றோம் வாருங்கள் அப்பா



காலமெல்லாம் கண்ணீருடன்
மனைவி, பிள்ளைகள் , மருமகன், பேரப்பிள்ளைகள்.

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-12 செம்மணி வீதி ஆதன இலக்கம் 97 என்ற ஆதன இலக்கத்தைக்கொண்ட ஆதனம் J.M அந்தோனிப்பிள்ளை கைம்பெண் யோசெப் தங்கரத்தினம் என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப் பட்டுள்ளது.

74/1 கோவில் தெரு கொழும்பு 02 என்னும் முகவரியைச்சேர்ந்த முருகேசு மரியாம்பிள்ளை சிவராஜா கைம்பெண் றீற்றா சவுந்திரவதி பிரசித்த நொத்தாரிசு செல்லத்துரை ஜெயரட்ணம் அவர்கள் முகதாவில் 1999ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் திகதி தன்னுடைய தாயாரான யோசெப் மனுவல் அந்தோனிப்பிள்ளை கைம்பெண் யோசப்பின் தங்கரத்தினம் அந்தோனிப்பிள்ளையினுடைய சொந்த மும் உரித்தும் உடைய ஆதனமாக இருந்து தனக்கு உரித்து வந்தடைந்த ஆதனமென வெளிப்படுத்தி 30ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றியுள்ளார். -

குறித்த ஆதனத்தை 74/1 கோவில் தெரு கொழும்பு 02 என்னும் முகவரியைக் கொண்ட முருகேசு மரியாம்பிள்ளை சிவராஜா கைம்பெண் றீற்றா சவுந்தரவதி பிரசித்த நொத்தாரிசு செல்லத்துரை ஜெயரட்ணம் அவர்கள் முகதாவில் 61ம் இலக்கத்தில் நிறைவேறிய 06.01.2013ம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் தனது மகள் பிலிப் வசந்தராஜனும் பெண் ரூபகாந்திக்கும் நன்கொடையாக வழங்கி ஆட்சியை ஒப்படைத்துள்ளார்.குறித்த மரினா ரூபகாந்தி வசந்தராஜன் பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜ் முகதாவில் 09.12.2011ம் திகதி 3652 இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியூடாக சங்கீதா பத்மினி நந்தகுமாருக்கு நில.பர.3 குளி 2 இனை நன்கொடையாக அளித்துள்ளமையால் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் மிகுதி ஆதனத்திற்கு மரினா ரூபகாந்தி வசந்தராஜன் உரிமை கோருகின்றார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "றீற்றா கல்லூரி வளவு" நில பர 08 குளி 04.06 என்னும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S.கனகசபை 19.06.2017ம் திகதியில் 6753ம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தின் பிரகாரம் நில.பர.08 குளி 04.09. இதில் நன்கொடையளிக்கப்பட்ட நில.பர03 குளி 2 நீக்கிய மிகுதி ஆதனம் இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் N.கேதீஸ்வரன் அவர்களால் 10.08.2020ம் திகதியிட்டு 4725 ம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டு இதன் விஸ்தீரணம் நில.பர4 குளி 13.81

கிழக்கு:-பாதை
வடக்கு:-நந்தகுமார் பெண் அஞ்சலா பத்மினியின் ஆதனம்.
மேற்கு:- சென் மேரிஸ் சேர்ஜ் ஆதனமும் ராஜன் கூலின் ஆதனமும்.
தெற்கு:- செம்மணி வீதி.

தற்போது பிலிப் வசந்தராஜன் பெண் ரூபகாந்தி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வசந்தராஜன் பெண் ரூபகாந்தி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர்
மாநகரசபை

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 10 . 1946 — மறைவு 14 . 12 . 2020

### செல்லர் நடராசா

**(ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர், இ.போ.ச. காரைநகர்)**

மாவிட்டபுரம் மதவடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் நடராசா அவர்கள் நேற்று (14.12.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், தங்கமலர், தங்கராசா, தியாகராசா, நீலா, கந்தசாமி (அமரர்), இரத்தினசிங்கம் (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமல்ராஜ் (அமரர்), பிரதாபன் (இ.போ.ச. காரைநகர்), சதீஸ்ராஜ் ஆகியோரின் தந்தையாரும், ரேகா (கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை) ரோகினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவிஷாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.**

**தகவல் : குடும்பத்தினர்.**

## 7 ஆயிரத்து 211 பேர் தனிமை நிலையங்களில்

கொழும்பு, டிசெ.15

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 76 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 7 ஆயிரத்து 211 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, தற்போது வரை 23 ஆயிரத்து 793 பேர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-இ)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 . 05 . 1937 — இறப்பு 29 . 11 . 2016

### விநாயகமூர்த்தி சிவக்கொழுந்து

திதி: பூர்வபக்ஷ பிரதமை

இந்த உலகில் வர்ணிக்க வார்த்தைகளும்
கவிதைகளும் இல்லாத உறவு என்றால்
அது அம்மா ..... !
என்றும் உங்கள் நினைவுகளுடன்

**விநாயகமூர்த்தி வாத்தியார் வீதி,**
**மீசாலை வடக்கு,**
**மீசாலை**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் கனகம்மா

நல்லூர் பருத்தித்துறை வீதியை பிறப்பிடமாகவும் செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகம்மா நேற்று (14.12.2020) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் (பிரதம கணக்காளர் பெருந்தெருக்கள் அமைச்சு), சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பொன்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசலட்சுமியின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் லைலாராணி (லண்டன்), சுகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பிரேமராணி (ஓய்வுபெற்ற தேசிய வீடமைப்பு அதிகார சபை), இரகுமார் (ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர்), சுரேஸ்குமார் (கனடா), பத்மராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயரெத்தினம் (ஜேர்மனி), செல்வரெட்ணம் (லண்டன்), பேபிசுலோசனா (ஓய்வுபெற்ற யாழ் மாநகர சபை A.O), இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கலைவாணி, கலாவதி (கனடா), உதயகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சித்தேஷ், சங்கீதா, மயூரன், துர்க்கா, கௌதமி, சௌமியா, ஆர்த்திகா, ஆதவி, யெலக்ஸ், கஜநீதன், கஜானன், கிறிஸ்தோபர், பிரவீன், தர்சிகா, பிந்துகாசினி, றொபேஸ், பிறாயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் நவீன், ஜெரோன், பெஞ்சமின், றொசான் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2020) செல்லர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**124/3, செல்லர் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**சுகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)**
**இரகுமார் (ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர்)**
**பிரேமராணி (ஓய்வுபெற்ற தேசிய வீடமைப்பு அதிகார சபை, திருகோணமலை)**
**077 322 3136**

# வடக்கு மீனவர்கள் களமிறங்க ஆயத்தம் அவசரமாக கைதில் இறங்கியது கடற்படை

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண மீனவர்களின் போராட்ட அறிவிப்பை யடுத்து இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யுமாறு வடக்கு கடற்படை யினருக்கு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், 4 படகுகளில் வந்திருந்த 27 மீனவர்கள் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டனர்.

ராமேஸ்வரத்திலிருந்து வந்த 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி நெடுந்தீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலை யில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் காரைநகர் கடற்படை முகாமில் தடுத்துவைக் கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து இன்று கொழும்பிலிருந்து அறிவுறுத்தல்கள் வரும் என்று கடற்படையினர் கூறியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதால் இலங்கை மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவது மட் டுமன்றி தொழில் உபகரணங்களும் சேதமடைகின்றன. எனவே இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துங்கள் என்று மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கடந்த வாரம் கடலில் இறங்கி இந்திய மீனவ ர்களைத் தடுத்துநிறுத்தவுள்ளோம் என்று கூறியிருந்த நிலையில், தாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம் என்று கூறி மாவட்ட அதிகாரிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருந்தனர். மேற்கொண்டு நடவடிக்கை இடம் பெறாமையால் இன்று போராட்டம் நடத்தவிருந்தனர்.

இந்தநிலையில், அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்க ளைக் கைதுசெய்யுமாறு அவசர உத்தரவை இலங்கை அரசு நேற்றுப் பிறப்பித்தது.

இந்தியாவில் கொரோனாத் தாக்கம் அதிகரித்தபோது இந்திய மீனவர்களைக் கைதுசெய்யும் கடற்படையின ரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுவதான காரணத்தைக்காட்டி இந்திய மீனவர்களைக் கைதுசெய் வது நிறுத்தப்பட்டிருந்தது. இதனை அறிந்துகொண்ட இந்திய மீனவர்கள் முல்லைத்தீவு, நெடுந்தீவு, பருத்தித் துறை என சகல பகுதிகளிலும் தரையிலிருந்து சுமார் 4 கிலோமீற்றருக்கும் உட்பட்ட பகுதிக்குள் ஊடுருவிட்ரோலர் மீன்பிடியில் ஈடுபடத் தொடங்கினர். அதனால் வடக்கில் எஞ்சியிருந்த மீனவ வளமும் சூறையாடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-26)

---

## கொரோனா....

தினமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்துடன் இரத்த அழுத்தம் மற்றும் நியூமோனியா ஆகியனவே இந்த உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு 14 ஐச் சேர்ந்த 65 வயதான ஆணொருவர் நேற்றுமுன்தினம் உயிரி ழந்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட நியூ மோனியாவே அவர் உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நாட்டில் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 154 ஆக அதிகரித் துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை யில் மட்டும் 141 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## 33,000...

என அரச தகவல் திணைக்களம் அறி வித்துள்ளது.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் (மினுவாங்கொட, பேலிய கொட, சிறைச்சாலை கொத்தணிகள்) இதுவரையில் 29 ஆயிரத்து 840 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 478 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 24 ஆயிரத்து 309 பேர் குணமடைந்துள்ளனர். 9 ஆயிரத்து 15 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## கொரோனா...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே இவர் களுக்குத் தொற்றுள்ளமை கண்டுபிடிக் கப்பட்டது.

இணுவிலைச் சேர்ந்த ஒருவரும், ஏழா லையைச் சேர்ந்த மூவரும், உடுவிலைச் சேர்ந்த ஒருவரும் கொரோனாத் தொற் றுக்கு இலக்காகியுள்ளனர். இணுவில் மற்றும் ஏழாலையைச் சேர்ந்த 5 பேரும் மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்பவர்கள். இவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உடுவிலில் 26 வயது இளைஞர் ஒரு வரே தொற்றுக்குள்ளாகியுள்ளார். மருத னார்மடத்தில் இனங்காணப்பட்ட முதல் தொற்றாளரின் அயலவர்கள் 152 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே, இவருக்குத் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இவர் முச்சக்கர வண்டித் திருத்தகம் (கராஜ்) ஒன்றில் பணியாற்றுகின்றார். இந்தத் திருத்தகம் மருதனார்மடத்தில் இனங்காணப்பட்ட முதல் தொற்றாளரின் மச்சானுடையது. அவரும் கொரோனாத் தொற்றுக்கு இலக்கான நிலையில் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க் கப்பட்டுள்ளார். (எ-5,26)

## வங்கி...

இவர் தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னா கம் கிளையில் பணியாற்றுபவர் என்று தெரிவிக்கப்பட்டது. அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இவ ரது மனைவி ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியை என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (எ-5)

## வவுனியாவில்....

யில், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 4 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியா லம், காமினி தேசிய பாடசாலை, இரம் பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை என்பனவே மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (எ-110)

## தொற்று...

தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்க ளில் 18 பேர் சிகிச்சைகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

இதுவரை 744 குடும்பங்கள் சுயதனி மைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தற் போது, மருதனார்மடம் தொற்றாளருடன் தொடர்புடைய 400 குடும்பங்கள் சுயத னிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் பரவலாக தொற்றுக் கண்ட றியப்பட்டுள்ளது. ஒரு பிரதேச செயலர் பிரிவினை மாத்திரம் முடக்குவதால் பயன் இல்லை. இதன் காரணமாகவே உடுவில் பிரதேச செயலர் பிரிவு முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட் டம் முழுவதையும் முடக்க முடியாது.

கொழும்பு மாவட்டத்தில் தொற்றாளர்கள் கண்டறியப்படும்போது அந்தப் பகுதி மாத்திரம்தான் முடக்கப்படுகின்றது. அதேபோன்று மாவட்டம் முழுவதும் முடக்கப்படாது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தளர்த்தப்பட்ட சுகாதார நடைமுறைகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்-என்றார். (ஓ.5)

## உரும்பிராய்...

கொரோனாத் தொற்றுக்குள்ளானவரிடம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவர் உரும்பிராய் பொதுச் சந்தையில் அதிக மாக நடமாடியுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டதை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்வரும் நாள்களில் சுகாதார ஆலோசனை பெறப்பட்டு மீளத் திறப்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

அதேவேளை, சங்கானை மரக்கறி சந்தை நேற்றுமுதல் மூடப்பட்டு சந்தை வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை வந்ததும் வழமைபோன்று சந்தையை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந் திரன் தெரிவித்தார். (ஓ.5,20)

## கிளிநொச்சி....

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட கிராமத்தில் இறுதிச் சடங் கில் பங்கேற்றுள்ளார். அதில் கலந்து கொண்டவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

கடந்தவாரம் விபத்தில் சிக்கி உயிரிழந்த ஒருவரின் இறுதிச் சடங்கு கடந்த சனிக் கிழமை நடைபெற்றது. அன்று மருத னார்மடம் சந்தையில் பி.சி.ஆர். சோத னைக்கு உட்படுத்தப்பட்டிருந்த கைதடி யைச் சேர்ந்த ஒருவர் கலந்து கொண்டுள் ளார். அவருக்கான பி.சி.ஆர். முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. அதில் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்து அவர் பங்கேற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களை தனி மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ஓ.6)

## அபாயத்தில்....

யில் வவுனியாவைச் சேர்ந்த 3 பேருக் குத் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட் டது. பாடசாலை மாணவி, கர்ப்பிணிப் பெண், பொலிஸ் உத்தியோகத்தர் ஆகி யோரே தொற்றுடன் இனங்காணப் பட்டனர்.

15 வயது பாடசாலை மாணவியும், பொலிஸ் உத்தியோகத்தரும் நேற்று வவு னியா பொது மருத்துவமனைக்குச் சென்ற போது, அவர்களுக்கு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருந்தது. பரிசோதனை முடிவுகளில் அவர்களுக்குக் கொரோனாத் தொற்றுள் ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கற்குழியைச் சேர்ந்த இந்த மாணவிக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட் டது என்பது தெரியவில்லை. இவர் கடந்த 10ஆம் திகதி வவுனியா மருத்துவ மனைக்கு உறவினர் ஒருவரைப் பார்க் கச் சென்றிருந்தார் என மாணவி தெரி வித்துள்ளார். இவர் கடந்த தினங்களில் பாடசாலைக்கும் சென்றிருக்கின்றார். காய்ச்சல் அறிகுறிகளை அடுத்தே மாணவி வைத்தியசாலைக்குச் சென்றுள் ளார்.

திருநாவற்குளத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரும் உடல் உபாதைக்காக வைத்தியசாலை சென்றபோது அவ ருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது. அதில் அவருக்குத் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதேவேளை, 25 வயதுடைய கர்ப்பி ணிப் பெண், டுபாயில் இருந்து திரும்பிய நிலையில், கந்தகாடு தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந் தார். இவருக்குச் சில தினங்களுக்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருந்தது. அதில் அவருக் குத் தொற்றில்லை என்ற முடிவு கிடைத் திருந்தது. அவர் தொடர்ந்து தனிமைப்ப டுத்தப்பட்டிருந்த நிலையில், அவரது வயிற்றில் உள்ள குழந்தையின் துடிப்புக் குறைவாகவுள்ளது என்று வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (எ-5,110)

## சாளம்பை....

கொழும்பிலிருந்து வவுனியா திரும்பிய தாயும், மகளும் சாளம்பைக் குளத்தில் அமைந்துள்ள அவர்களது வீட்டில் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்க ளுக்கான பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதையடுத்து வவுனியா புதிய சாளம் பைக்குளம் பகுதி கடந்த சனிக்கிழமை காலை முதல் தற்காலிகமாக முடக்கப்ப ட்டது.

தொற்று உறுதியான இருவரிடத்திலும் நெருங்கி பழகியவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்களில் 3 பேருக்கு மேலும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து புதிய சாளம்பைக்குளம் பகுதியின் முடக்கம் நீடிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அமைந்துள்ள அல் அக்சா பாடசாலையின் கல்வி நடவடிக் கைகள் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஓ,110)

# இறுதிக்குள் நுழைந்தது யாழ்ப்பாணம்



எல்.பி.எல் தொடரில் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்றிரவு இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் தம்புள்ள வைக்கிங் அணியை 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது ஜப்னா ஸ்ரேலியன்ஸ்.

ஹம்பாந்தோட்ட சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ள அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. ஜப்னா அணி சார்பில் அவிஷ்க, சார்ள்ஸ் ஆரம்பவீரர்களாக களமிறங்கினர். அவிஷ்க அதிரடியாக 39 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்க தொடர்ந்து வந்த சார்ள்ஸ் காட்டடியில் இறங்க அணியின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடு என எகிறியது. சார்ள்ஸ் 56 பந்துகளில் 76 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்க பின்வரிசை வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப இருபது பந்துப்பரிமாற்றங்கள்நிறைவில் 9 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை பெற்றது. பந்துவீச்சில் புஸ்பகுமார இரு இலக்குகளையும் அலி, மெண்டிஸ், லகிரு குமார தலா ஒவ்வொரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

166 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அணிக்கு ஆரம்ப வீரர்களான பட்டேல் 10, டிக்வெல்ல 29 ஓட்டங்களுடன் ஏமாற்றினர். மத்திய வரிசையில் அதிகபட்சமாக தரங்க 33 ஓட்டங்களையும் ரமேஸ் மெண்டிஸ் 26 ஓட்டங்களையும் பெற்றனர். எனினும் 19.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 37 ஓட்டங்களால் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை ஜப்னா ஸ்ரெலியன்ஸிடம் பறிகொடுத்தது தம்புள்ள வைக்கிங். பந்து வீச்சில் ஹசரங்க 3 இலக்குகளையும் சதுரங்க, ஒலிவர், அசலங்க, லக்மல், தனஞ்சய ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சார்ள்ஸ் தெரிவானார்.

நாளை புதன்கிழமை நடக்கவிருக்கும் மாபெரும் இறுதிப் போட்டியில் திசர பெரேரா தலைமையிலான ஜப்னா ஸ்டேலியன்ஸும் பானுக ராஜபக்ச தலைமையிலான தம்புள்ள வைக்கிங் அணியும் மோதுகின்றன.

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராசபாத வீதி, மெயின் றோட்டுடன் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக. தரகர் தேவையில்லை

**077 62 34 204**
**077 28 80 152**

(ராசவீதி சந்தி அருகாமை)

**காணி விற்பனைக்கு**

இருபாலை கிழக்கு C.C. பாட சாலை வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். (தரகர் தேவை இல்லை)
பரப்பு - 5 லட்சம்

**076 640 0974**
**077 805 1655**

# டெஸ்ட் தொடரை கைப்பற்றியது நியூஸிலாந்து!



நியூஸிலாந்து, டிசெ.15
நியூஸிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகளுக் கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை நியூஸிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நியூஸிலாந்துமேற்கிந்தியத் தீவு அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நியூஸிலாந்து அணி முதல் சுற்றில் 460 ஓட்டங்கள் குவித்தது. ஹென்றி நிக்கோலஸ் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். அவர் 174 ஓட்டங் களும், வோக்னர் 66 ஓட்டங்களும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் கேப்ரியல், அல்ஜாரி ஜோசப் தலா 3 இலக்குகளும், செமர் ஹோல்டர், ரோஸ்டன் சேஸ் தலா 2 இலக்குகளும் கைப்பற்றினார்கள். அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. நியூஸிலாந்து வீரர்களின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் மேற்கிந்தியத் தீவுகள் அணி திணறியது. மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 56.4 பந்துப்பரிமாற்றங்களில் 131 ஓட்டங்களில் சுருண்டது. நியூஸிலாந்து சார்பில் சவுத்தி, ஜேமிசன் தலா 5 இலக்குகள் வீழ்த்தி அசத்தினர்.

மேற்கிந்தியத் தீவுகள் 329 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. நியூஸிலாந்து வீரர்களின் அபாரமான பந்துவீச்சால் 2 ஆவது இன்னிங்ஸிலும் ஓட்டங்கள் பெற முடியாது மேற்கிந்தியத் தீவுகள் அணி திணறியது.

தொடக்க ஆட்டக்காரர் ஜான் கேம்பெல் 68 ஓட்டங்களும், கேப்டன் ஜேசன் ஹோல்டர் 61 ஓட்டங்களும், இலக்குக் காப்பாளர் ஜோஷ்வா டி சில்வா 57 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது சுற்றில் 79.1 பந்துப்பரிமாற்றங்களில் 317 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் நியூஸிலாந்து அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நியூஸிலாந்து சார்பில் போல்ட், நீல் வோக்னர் தலா 3 இலக்குகளும், சவுத்தி, ஜேமிசன் தலா 2 இலக்குகளும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் நியூஸிலாந்து அணி டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக ஹென்றி நிகோ லசும், தொடர் நாயகனாக ஜேமிசனும் தேர்வு செய்யப்பட்டனர். (ற-இ)

**விஸ்டம்**
**தொழில் நுட்பக் கல்லூரி**
077 248 7774

குறைந்த காலம் நிறைந்த கல்வி
குறைந்த கட்டணம் உயர்ந்த பெறுபேறு
ZOOM

06 Month Package
ஆரம்பம் 16.12.2020

**A/L 2021,2022,2020(Repeat)**

E.Tech: K.Ravikumar, P.Shanmukathasan, R.Sivaruban, R.Nirushan
BST: P.Nirojanan
SFT: R.Nirushan, P.Vimalanathan, A.Aravinthan
ICT: S.Mayurathasan
Maths(7): Tharshan
Agri: Shanas
Geo.: Kirushna

**076 552 9093 / 077 248 7774 / 021 221 7860**

# 145 ஓட்டங்களால் சிட்னி சிக்சர்ஸ் அபார வெற்றி!!

கான்பேரா, டிசெ.15
பிக் பாஷ் லீக் ரி-20 தொடரில் சிட்னி சிக்சர்ஸ் அணி 145 ஓட்டங்கள் வித்தியா சத்தில் அபார வெற்றி பெற்றது. பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் மெல்போர்ன் ரெனேகட்ஸ் ஆகிய அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தா டிய சிட்னி சிக்சர்ஸ் அணி ஜோஷ் பிலிப், ஜோர்டான் சில்க் ஆகிய வீரர்களின் அதிரடி ஆட்டத்தால் 4 இலக்குகள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 206 ஓட்டங்கள் கடின இலக்குடன் மெல்போர்ன் ரெனேகட்ஸ் களம் இறங்கியது. அந்த அணி 10.4 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 60 ஓட்டங்களில் சுருண்டது. சிட்னி சிக்சர்ஸ் 145 ஓட்டங்கள் வித்தியசத்தில் அபார வெற்றி பெற்றது. (ற-இ)

**துரித பொதிகள் சேவை**

வெளிநாடுகளுக்கு 3-5 நாட்களில் தபால்கள் மற்றும் பொதிகள் அனுப்பிவைக்கப்படும்.
**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd**
321, K.K.S. Road, Jaffna. 46, Adiyapatham Road, Thirunelvely.
0777554528, 021 222 7835



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.